
# திரட்டுப் பால்




கி.வா. ஜகந்நாதன்

# திரட்டுப்பால்

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் லிமிடெட்
46, இராயப்பேட்டை ஹைரோடு,
சென்னை-600 014

உரிமை பதிவு

அமுதம்: 274

முதற்பதிப்பு-ஜுலை-1984

விலை-4.00

---

அச்சிட்டோர்:-

விமல் & கோ.

சென்னை-5

# முன்னுரை

கந்தர் அலங்காரம் விநாயகரை முதலிற் சொல்லி, மேலே நூற்றேழு பாடல்கள்சேர்ந்து, மொத்தம் நூற்றெட்டுப் பாடல்கள் கொண்டு விளங்குகிறது. நூற்றெட்டு என்பது அர்ச்சனைக்குரிய எண்; அஷ்டோத்தர சத நாம அர்ச்சனை என்று சொல்வார்கள்.

இந்தப் பாடல்களில் அருணகிரிநாதப் பெருமான் முருகப் பெருமானுடைய திருவடி முதல் திருமுடி வரையில் உள்ள கோலத்தையும், அப்பெருமான் திருவிளையாடல் களையும், வீரச்செயல்களையும் சொல்கிறார். தாம் பெற்ற அநுபவத்தைப் பல வகையில் எடுத்துரைக்கிறார். மக்களுக்கு உபதேசம் செய்கிறார். உடம்பின் இழிவையும், பொருள் நிலையாமையையும், மாதர் மயலை அகற்ற வேண்டுவதையும் கூறுகிறார். பல இடங்களில் தாம் மாதர் மயலில் உழந்த தாகவும், வேறு பல குறைகளை உடையவராகவும் சொல்லிக் கொள்கிறார், அவற்றை அவருடைய குறைகளாக எண்ணக் கூடாது. பிற மக்களுடைய குற்றங்களைத் தம்மேல் ஏற்றிக் கொண்டு சொல்வது ஞானியர் இயல்பு. மாணிக்கவாசகர் முதலிய பெரியோர் திருவாக்கிலிருந்து இந்த உண்மையை உணரலாம். காரைக்காலம்மையார் அறுபத்து மூவரில் ஒருவர். அவர் ஒரு பாட்டில், "நினையா தொழிதிநன் னெஞ்சமே நந்தமக்கோர் தஞ்சமென்று, மனையாளை யும்மைந்தர் தம்மையும் நம்பி ஓர் ஆறுபுக்கும், நனையாச் சடைமுடி நம்பன்நந் தாதைநுந் தாதசெந்தீ, அனையான் அமரர் பிரான்அண்ட வாணன் அடித்தலமே" என்று பாடுகிறார். அவருக்கு மனையாளும் மக்களும் இருக்க நியாயம் இல்லை. அவர் பெண்மணி அல்லவா? பிறருடைய குற்றங்களைத் தம்மேல் ஏறட்டுக் கொண்டு பெரியோர்கள்

சொல்வதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு. இதை நைச்சியா நுசந்தானம் என்பர். முருகனை வழிபடுபவர்களுக்குக் காலபயம் இன்மையும் இனிப் பிறவா நிலை வரும் என்பதும் இப்பாடல்களில் காணலாம். முருகன் திருநாமங்கள் பலவற்றை அங்கங்கே இந்த மணி மாலையில் பதித்து வைத்திருக்கிறார்.

ஒரு மூர்த்தியை உள்ளபடியே பார்ப்பதை விட அலங்காரத்தோடு பார்க்கும்போது நம் கண்ணைக் கவருவதை உணர்கிறோம். அவ்வாறு இந்த அலங்கார நூல் அமைந்திருக்கிறது. மாலையில் இடையிடையே மணமற்ற பச்சை இலைகளையும் தொடுத்திருப்பது போல, இந்நூலில் இடையிடையே நம் குறைகளைத் தம் குறைகளாக ஏற்றுச் சொல்கிறார். இந்நூலில் உள்ள கருத்துக்கள் எல்லாவற்றையும் தொகுத்து வகுத்து முற்றச் சொல்வது அரிய செயல். எனினும் என்னால் இயன்ற வகையில் அதைச் செய்திருக்கிறேன்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முருகன் திருக்கோலம் | 1 |
| 2. | முருகன் திருநாமங்கள் | 4 |
| 3. | மயில் | 8 |
| 4. | சேவல் | 10 |
| 5. | தலங்கள் | 11 |
| 6, | திருவிளையாடல்களும் வீரச்செயல்களும் | 13 |
| 7. | உபதேசம் | 15 |
| 8. | தம்மை இழித்துக் கொள்ளல் | 17 |
| 9. | பிற தெய்வங்கள் | 20—22 |
| | சிவபெருமான் | 20 |
| | அம்பிகை | 20 |
| | திருமால் | 21 |
| | உடலின் இழிவு | 22 |
| 10. | உபதேசம் | 23 |
| | துணை | 24 |
| | கால பயம் இன்மை | 24 |
| 11. | அநுபவம் | 26 |
| 12. | கந்தர் அலங்காரம் | 31 |
| 11. | அருஞ் சொற்பொருள் | 65 |

## கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அலங்காரம் | கி.வா.ஜ, | 6 00 |
| 2. | குறிஞ்சிக் கிழவன் | ,, | 6 00 |
| 3. | ஆனந்தத் தேன் | ,, | 6 00 |
| 4. | வாழ்க்கைக் கூத்து | ,, | 6 00 |
| 5. | மரணம் இல்லா வாழ்வு | ,, | 6 00 |
| 6. | காலையும் மாலையும் | ,, | 6 00 |
| 7. | அடியார்க்கு நல்ல பெருமான் | ,, | 6 00 |
| 8. | மயில் ஏறிய மாணிக்கம் | ,, | 6 50 |
| 9. | தனி வீடு | ,, | 6 00 |
| 10. | படிக்கும் திருப்புகழ் | ,, | 6 00 |
| 11. | ஓங்கார ஒளி | ,, | 6 00 |
| 12 | தண்டைச் சிற்றடி | ,, | 6 00 |
| 13. | நீர்க்குமிழி | ,, | 6 00 |
| 14. | விழிக்குத் துணை | ,, | 6 00 |
| 15. | பழநித் திருநாமம் | ,, | 6 00 |
| 16. | மனமலர் | ,, | 6 00 |
| 17. | இருவிலங்கு | ,, | 6 00 |
| 18. | தனிவெளி | ,, | 6 00 |
| 19. | உள்ளம் குளிர்ந்தது | ,, | 6 00 |
| 20. | திரட்டுப்பால் | ,, | 4 00 |

மேற்கண்ட இருபது நூல்களையும் மொத்தமாக வாங்குவோருக்கு விலைச்சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதுக.

**அமுத நிலையம் லிமிடெட்**

46, இராயப்பேட்டை ஹைரோடு,
சென்னை-600 014.

# திரட்டுப்பால்

## 1. முருகன் திருக்கோலம்

முருகப் பெருமானுடைய திருவடி புண்டரீகத்திினும் செக்கச்சிவந்து விளங்குகிறது. அந்தத் திருவடியில் அவன் தண்டையையும், கிங்கிணியையும், சதங்கையையும், வெட்சி மலரையும், குராமலரையும், கடம்ப மலரையும் அணிந்திருக்கிறான். அந்தத் திருவடி அருள் பாலித்தலால் அவற்றை அருட்பதங்கள் என்று சொல்கிறார் அருணகிரிநாதர். அந்தக் கழலை இடைவிடாமல் நினைத்து அதில் மனம் சேர்ந்திருக்க வேண்டும். "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்" என்ற குறளின் உரையில், சேர்தலாவது இடை விடாது நினைத்தல் என்று பரிமேலழகர் உரை எழுதுகிறார். அவனுடைய சிற்றடியைத் தொழுது கருத்தை இருத்தி வைத்தல் வேண்டும். அவனுடைய திருவடியை வணங்கினவர் தலைமேல் அயன் எழுதிய எழுத்து அழிந்து போகும். இவ்வாழ்க்கையில் துன்பம் வராது; பிறகு பிறப்பும் வராது. அவனுடைய தண்டையம் புண்டரிகமாகிய திருவடியே சுத்த ஞானமயமானது. அவனுடைய திருவடியே மோட்சம். 'இறைவன் திருவடி அடைந்தார்' என்று சொல்வது அவர் முத்தியடைந்தார் என்பதையே குறிக்கும். "செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள்" என்று வேண்டுகிறார் அருணை முனிவர். இந்த உடம்பு போன பின்பு முருகன் அன்பர்களுக்குக் கதியாக இருப்பவை அவனுடைய இருதாளன்றி வேறு இல்லை.

அருணகிரியார் தம்முடைய பாட்டுக்கள் எழுதிய சுவடியின் அடியேட்டில் அவன் பாதம் பட்டது என்கிருர். அந்த அடி ஏடு என்பது மனந்தான். மயிலிலும் தேவர் தலையிலும் அவன் அடிகள் பட்டனவாம். நம்முடைய விழிகளுக்குத் துணையாக இருப்பன அவன் திருமென் மலர்ப் பாதங்கள். நம்முடைய புத்தியைப் பிற பொருள்களில் செல்லாமல் வாங்கி அவன் பதாம்புயத்தில் புகட்டி அன்பால் முத்தியைப் பெறலாம்.

முருகன் தன் அரையில் கிண்கிணி அணிந்திருக்கிருன். அதன் ஓசை பதினுலுலகமும் கேட்கின்றதாம். சிவப்பு ஆடையையும், கிண்கிணியையும், உடைமணியையும், உடைவாளையும் புனைந்திருக்கிருன்.

அவன் தன் திருக்கரங்களால் சப்பாணி கொட்டுகிருன். அவற்றிலும் வெட்சி மாலையை அணிந்திருக்கிருன். சேவற் கொடியை ஏந்தியிருக்கிருன். எப்போதும் வேலைப் பிடித்திருக்கிருன். அதனுல், 'வேலே விளங்கு கையான்' என்கிருர். அவன் வேலும் திருக்கரமும் உண்மையான துணையாக அன்பர்களுக்கு உள்ளன. அவன் கையிற் சிறு வாளும் சுட்டியும கட்டாரியும் இருக்கின்றன.

அவன் திருமார்பில் கடம்ப மலர்மாலை விளங்குகிறது. அது பொன் தகட்டாற் செய்தது போலப் பொலிகின்றது; மணம் பரப்புகிறது.

அவனுடைய பன்னிரு தோள்களுடன் அவன் தித்தித்திருக்கும் அமுதாக இருக்கிருன். வள்ளியை அணைக்கின்ற தோள்கள் அவை. அவனுடைய திருமுகங்கள் வரிசையாக உள்ளன; ஆதலின் பத்தித் திருமுகம் என்கிருர். அவன் திருமுகம் ஆறும் கண்ட தபோதனர்க்கு யமபயம் இராது. அந்த முகங்கள் மணம் வீசுகின்றன.

அவன் கண்கள் தாமரை மலரைப் போல இலங்குகின்றன.

ஓங்காரத் துள்ளொளிக்குள் அவன் திருவுருவத்தைக் கண்டவர்கள் தூங்காமல் தூங்கும் சமாதி நிலையைப் பெறுவார்கள்.

அவனுடைய திருக்கரத்திலுள்ள வேல் ஞானமே வடிவானது. வேதங்களாலும் ஆகமங்களாலும் அறியும் ஞானமே வேலாக இருக்கிறது. அதனுல், "வேதாகம சித்ர வேல்" என்கிருர். அது மிகவும் கூர்மையானது. அயில் வேல், இகல் வேல், படைபட்ட வேல், வையிற் கதிர் வேல், கிரௌஞ்சகிரி ஊடுருவத் துளைத்த வேல், அது. அன்பர்களுக்கு மெய்த்துணையாக இருக்கிறது. அதை முருகன் விட்டதனுல் கடல் வெந்தது; சூரனுகிய மாமரம் தறிபட்டு உதிரம் குமுகுமெனக் கக்கியது; கிரி ஊடுருவி வந்தது. அது குன்றம் எட்டும் கிழித்தோடும் வேல்; சூரனையும் கிரௌஞ்ச மலையையும் ஒரே சமயத்தில் துளைத்தது. அது புறப்பட்ட பொழுதே அசுரர்கள் அஞ்சிக் குழம்பிப் புலம்பி ஆரவாரித்தனர். சக்தி என்பது வேலுக்கு ஒரு பெயர். கதிர் வேல், சிகராத்ரி கூறிட்ட வேல், புரையற்ற வேல், வேலையையும் சூரனையும் மேருவையும் குலைத்த வேல், செவ்வேல், வடிவேல், செஞ்சுடர் வேல், கூர் கொண்ட வேல், செய்யவேல், தனிவேல், விக்ரம வேலாயுதம், போர் வேல் என்றெல்லாம் வேலாயுதத்தைப் பாராட்டுகிருர்.

அவனுடைய திருநாமங்களைப் பல வகை அடைமொழிகளுடன் சொல்லிச் சொல்லி இன்புறுகிருர்.

# 2. முருகன் திருநாமங்கள்

அடியார்க்கு நல்ல பெருமாள், அமர சிகாமணி, அமராவதி காவலன், அமராவதியிற் பெருமாள், அரக்கர் புவி ஆர்த்தெழத் தொட்ட போர்வேல் முருகன், அராப் புனை வேணியன் சேய், அவுணர் குலம் அடங்கப் பொடி ஆக்கிய பெருமாள், அயில் வேலன், அழித்துப் பிறக்க வொட்டா அயில் வேலன், அறு முகவன், ஆலம் குடித்த பெருமான் குமாரன், இகல் வேலன், இராவுத்தன், இளங் குமரன், உமை முலைப்பாலுண்ட பாலன், உமையாள் பயந்த இலஞ்சியம், எந்த நேரத்திலும் கோலக் குறத்தியுடன் வருவான், எம் கோன், ஒரு வரைப்பங்கில் உடையாள் குமாரன், க்ருபாகரன், கட்செவியால் பணி அணி கோமான் மகன், கடத்திற் குறத்தி பிரான், கடம்பின் மலர்மாலை மார்பன், கந்தக் கடம்பன், கந்த சுவாமி, கந்த வேள், கந்தன், கரி போற்ற நின்ற கடவுள் மெச்சும் பராக்ரம வேலன், கருமால் மருகன், கலாப மயூரத்தன், கவியாற் கடல் அடைத்தோன் மருகோன், காங்கேயன், காட்டிற் குறத்தி பிரான், கார்மயில் வாகனன், காலாயுதக் கொடியோன், காவலன், காவிரிச் செங்கோடன், கிண்கிணி சரணப்ரதாபன், கிருபாகரன், கிரௌஞ்ச கிரி ஊடுருவத் துளைத்த வைவேல் மன்னன், கிரௌஞ்ச வெற்பை அடுதலைச் சாதித்த வேலோன், கிழியும்படி அடற் குன்று எறிந்தோன், குகன், குணதுங்கன், கும்பக் களிற்றுக்கு இளைய களிறு, குமரன், குமரேசன், குருதேசிகன், குரு

நாதன், குவடு தவிடுபடக் குத்திய காங்கேயன், குறச் சிறுமான் அல்குற்கு உருகும் குமரன், குறத்தி பிரான், குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனைக் கல்யாணம் முயன்றவன், குறிஞ்சிக் கிழவன், குன்று எறிந்த தாடாளன், கூர் கொண்ட வேலன், கைதான் இருபதுடையான் தலை பத்தும் கத்தரிக்க எய்தான் மருகன், கொடுங் கோபச் சூருடன் குன்றம் துளைக்கத் திறக்க வேல் விடும் கோன், கோழிக் கொடியன், சங்க்ராம வேள் பட விழியால் செற்றுற்கு இனியவன், சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷாபரணக்ருபாகரன், சடாடவிமேல் ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின் கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன், சண்முகவன், சண்முகன், சப்பாணி கொட்டிய கை ஆறிரண்டுடைச் சண்முகன், சயிலசரசவல்லி தழுவும்புயன், சிந்து வெந்து கொக்குத் தறிபட்டெறிபட்டுதிரம் குமுகுமெனக் கக்கக் கிரியுருவக் கதிர் வேல் தொட்ட காவலன், சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை விரும்பும் குமரன், சுரபாஸ்கரன், சூர்க்கொன்ற ராவுத்தன், சூரகுலாந்தகன், சூரபயங்கரன், சூரனை ஓரிமைப் போதினில் கொன்றவன், சூரிற் கிரியிற் கதிர்வேல் எறிந்தவன், செங்கோட்டு வெற்பன், செங்கோடன், செங்கோடைக் குமரன், செங்கோடை வெற்பன், செஞ்சுடர் வேல் வேந்தன், செந்தமிழ் நூல் விரித்தோன், செந்தில் மேவிய சேவகன், செந்தில் வேலன், செந்திலோன், செம்மான் மகளைக் களவு கொண்டு வரு மாகுலவன், செய்ய வேல்முருகன், செவ்வேலன், செவ் வேற் பெருமான், செழுஞ்சுடர், சேந்தன், சேயான வேற் கந்தன், சேவகன், சேவற்கைக் கோளன், சேவற் கொடியுடையான், ஞானாகரன், தனிமயில் ஏறும் இராவுத்தன், தனி வேல் முருகன், தூவிக்குலமயில் வாகனன், தென்தணிகைக் குமரன், தேங்கிய அண்டத்திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே பூங்கழல் கட்டும் பெருமாள், தேசிகன், தேவேந்த்ர லோக சிகாமணி, தொல்லைப் பெருநிலம் சூகரமாய்க்கீன்றான் மருகன், ந்ருபன், நிகராட்சமபட்சன், நிர்மலன், நிருத

சங்கார பயங்கரன், நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் ப்ரதாபன், பட்சிதுரங்கன், படைபட்ட வேலவன், பணிபாச சங்க்ராம பணமகுட நிகராட்சமபட்ச பட்சிதுரங்க நிருபன், பரமகல்யாணிதன் பாலகன், பராக்ரம வேலன், பன்னிரு புயன், பாதித் திருவுருப் பச்சென்றவர்க்குத் தன் பாவனையைப் போதித்த நாதன், பிசிதர்தம் வாய் நிணம் கக்க விக்ரம வேலாயும் தொட்ட நிர்மலன், புரமெரித்தான் மகன், புராந்தகற்குக் குருபூத வேலவன், புரையற்ற வேலவன், புனச்சிறுமான் தரு பிடி காவலன், பெரும் பாம்பில் நின்று நடிக்கும் பிரான் மருகன், போர் வேலன், மயில் வாகனன், மயிலேறிய மாணிக்கம், மயில் ஏறும் ஐயன், மயூரத்தன், மலையாறு கூறெழ வேல் வாங்கினன், மன்ருடி மைந்தன், மாமயிலோன், மாலோன் மருகன், மாவலிபால் சேவடி நீட்டும் பெருமான் மருகன், மாவினைச் செற்ற போர் வேலன், முகம் ஆறுடைக் குரு நாதன், முகம் ஆறுடைத் தேசிகன், முத்தமிழால் வைதாரை யும் வாழ வைப்போன், முருகன், மெய்ஞ்ஞான தெய்வம், மைவரும் கண்டத்தர் மைந்தன், ராவுத்தன், வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோள் அண்ணல், வள்ளிக்கு வாய்த்தவன், வள்ளி காந்தன், வள்ளி கோன், வள்ளி முற்றுச்தனத்திற்கு இனிய பிரான், வள்ளியை வேட்டவன், வாகைச் சிலை வளைத்தோன் மருகன், வானவர்க்கு மேலான தேவன், விட்சோப தீரன், விம்மி அழும் குருந்து, வெஞ் சூரனை விட்ட சுட்டியிலே குத்தித் தரங்கொண்டமராவதி கொண்ட கொற்றவன், வெள்ளி மலையெனவே கால் வாங்கி நிற்கும் களிற்றுன் கிழத்தி கழுத்திற் கட்டும் நூல் வாங்கிடாதன்று வேல் வாங்கி, வெற்பு நட்டு உரகபதித் தாம்பு வாங்கி மதித்தான் திருமருகன், வெற்பைப் பொருத கந்தன், வெற்றிக் களத்தில் கழுதாட வேல் தொட்ட காவலன், வெற்றி வேலோன், வெற்றிவேற் பெருமான், வேடிச்சி கொங்கை விரும்பும் குமரன், வேதாகம சித்ர வேலாயுதன், வேல் எடுத்துத் திண்கிரி சிந்த

விளையாடும் பிள்ளை, வேல் தொட்ட காவலன், வேல் முருகன், வேலவன், வேலன், வேலாயுதன், வேலால் கிரி துளைத்தோன், வேலே விளங்கு கையான், வேலையில் வேலை விட்டோன், வேலோன், வேற் கந்தன், வேற் குமரன், வேற் படை வானவன், வையிற் கதிர் வடிவேலன், வைவேல் மன்னன், வைவைத்த வேற்படை வானவன்.

# 3. மயில்

முருகப் பெருமானுடைய வாகனமாகிய மயிலை எத்தனை விதமாகப் பாராட்டுகிறார்! அதைப் பற்றித் தனியே மூன்று கவிகளையே பாடியிருக்கிறார்.

"குசைநெகி ழாவெற்றி வேலோன் அவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு; அடியிட எண்
திசைவரை தூள்பட்ட; அத்தூளின் வாரி திடர்ப்பட்டதே." (1)

அதன் பீலியின் கொத்து அசைபட அதனால் உண்டான பிரசண்ட வாயுவினால் மேருமலையே அசைந்ததாம். அது அடியிட்டு நடந்த போது எட்டுத் திசைகளிலும் உள்ள மலைகள் தூள் தூளாக ஆகிவிட்டன. அந்தத் தூளினால் கடல் மேடாகிப் போய்விட்டதாம். புலவர்கள் இவ்வாறு உயர்வு நவிற்சியாகச் சொல்வது இயல்பு. அருணகிரி நாதரோ பக்திப் பரவசத்தால், தம் அகக்கண்ணால் இப்படியெல்லாம் காண்கிறார்.

மற்றொரு பாட்டு வருமாறு; அது மயிலையே விளித்துப் பாடியது.

"தடக்கொற்ற வேள்மயி லே,இடர் தீரத் தனிவிடின், நீ

வடக்கிற் கிரிக்கப் புறத்தும்நின் தோகையின்
வட்டம்இட்டுக்
கடற்கப் புறத்தும் கதிர்க்கப் புறத்தும்
கனகசக்ரத்
திடர்க்கப் புறத்தும் திசைக்கப் புறத்தும்
திரிகுவையே.''

கொற்றவேள் மயிலாகிய அதனை யாரும் மேல் ஏறி ஓட்டாமலே தனியே விட்டு விட்டால் அது மேருமலையையும் தாண்டிச் சென்று கடல், கதிரோன், உலகப் புறத்தில் உள்ள சக்கரவாள கிரி ஆகிய எல்லாவற்றையும் தாண்டிவிடுமாம். முருகன் அது தாவி அடியிடும்படி ஓட்டுகிறான். அது கிரணம் வீசும்படி கலாபத்தை உடையது. பச்சை நிறம் கொண்ட அதன் மேல் ஏறிவரும் போது அவன் பச்சையிற் பதித்த மாணிக்கம் போலத் தோன்றுகிறான். கொற்ற மயூரம், மாமயில், வெற்பை இடிக்கும் கலாபத் தனிமயில், நிகராட் சமபட்ச பட்சி, கார்மயில், கலாபப்புரவி, கொற்ற வேள் மயில், செழுங்கலபி என்கிறார்.

மூன்றாவது பாட்டு:

''சேலில் திகழ்வயல் செங்கோடை வெற்பன்
செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியும் காசினியைப்
பாலிக்கும் மாயனும் சக்ரா யுதமும் பணிலமுமே.''

மயிலுக்கும் பாம்புக்கும் பகை. முருகன் மயில் உற்சாகம் மிகுந்து விட்டால் ஆதிசேஷனுடைய முடிகளையே தாக்குகிறதாம். அதனால் ஆதிசேஷன் முடிமணிகள் உதிர்கின்றன. அதன்மேல் சயனித்திருக்கும் திருமாலே கீழே விழுந்து விடுகிறாராம். அவர் கையில் உள்ள சக்ராயுதமும் சங்கமும் மயிலின் காலில் கிடக்கின்றனவாம். தூவிக்குல மயிலாகிய அது தன் கலாபத்தை விரித்தால், சுராசலங்கள் எட்டும் குலகிரி எட்டும் விட்டோடும்; எதற்கும் எட்டாத வெளி மட்டும் புதைய அந்தக் கலாபம் விரிக்குமாம்.

# 4. சேவல்

முருகப் பெருமானுடைய கொடி சேவல். அது கொடியில் இருப்பதோடு வேறு பல செயல்களையும் செய்கிறதாம். அதன் பெருமையை ஒரு தனிப் பாட்டில் சொல்கிறார்.

''படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப்
பதாகைஎன்னும்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச்
சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாகம்; உதிர்ந்த
துடுபடலம்;
இடைபட்ட குன்றமும் மாமேரு வெற்பும்
இடிபட்டவே.''

அது தன் சிறகை அடித்துக் கொண்டதாம்; அதனால் உண்டான காற்றினால் கடல் கிழிந்து கொந்தளித்தது; அண்ட கடாகம் உடைபட்டது; உடுபடலம் உதிர்ந்தது; பல மலைகளும் மேருவும் இடிபட்டனவாம்.

பின்னும் அதனை, கோழிக்கொடி, செஞ்சேவல், சுடர்க்குடுமிக் காலாயுதக் கொடி, சேவல், சேவற்கொடி, சேவற்பதாகை என்று சொல்கிறார்.

# 5. தலங்கள்

முருகன் எழுந்தருளியிருக்கும் தலங்கள் சிலவற்றைச் சொல்கிறார். திருவண்ணாமலையில் பல காலம் வாழ்ந்து வாராதலின் முதற் பாட்டிலேயே, "அடலருணைத் திருக் கோபுரத்தே அந்த வாயிலுக்கு, வடவருகிற் சென்று கண்டு கொண்டேன் வருவார் தலையில், தடபடெனப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக், கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே" என்கிறார். திருச்செங்கோட்டில் பேரன்பு கொண்டவர் அருணகிரிநாதர். வேறு எந்தத் தலத்தையும் சொல்லாத கந்தர்அனுபூதியில், "நாகாசல வேலவ" என்று அந்தத் தலத்தை மட்டும் சொல்கிறார்.

கந்தர் அலங்காரத்தில், தெய்வத்திருமலைச் செங்கோடு, காவிரிச் செங்கோடு, செங்கோட்டு வெற்பு, சேலார் வயற் பொழிற் செங்கோடு, கன்னிப் பூகமுடன் தருமா மருவு செங்கோடு, சேலிற்றிகழ்வயற் செங்கோடை வெற்பு என்று சிறப்பிக்கிறார்.

திருச்செந்தூரை, "சேல்பட் டழிந்தது செந்தூர் வயற் பொழில்" என்பதில் சொல்வதோடு, "ஒரு கோடி முத்தம் தெள்ளிக் கொழிக்கும் கடற்செந்தில்" என்றும் சொல்கிறார். கடல் அலையின் துளிகள் யாவும் அவருக்கு முத்துக்களாகத் தோன்றின போலும்! "படிக்கின்றிலை பழநித் திருநாமம்" என்று பழநியையும், "தென்தணிகை", "திருத்தணிக் குன்று" என்று திருத்தணியையும் இயம்புகிறார்.

வள்ளியம் பெருமாட்டியைப் பலபடியாகப் பாடிப் புகழ்கிருர். பெரும்பைம்புனத்தினிற் செவ்வேனல் காக்கின்ற பேதை, பொருபிடியும் களிறும் விளையாடும் புனச் சிறுமான் தரு பிடி, கடத்திற் குறத்தி, நெற்ருப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீல வள்ளி, தெள்ளிய ஏனலில் கிள்ளை, கள்ளச் சிறுமி என்று அப்பிராட்டி தினைப்புனம் காத்ததைச் சொல்கிருர். தேனென்று பாகென்று உவமிக்கொணு மொழித் தெய்வ வள்ளி, கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லி (கொல்லி=ஒரு பண்), கொவ்வைச் செவ்வாய் வல்லி, மொய்தார் அணிகுழல் வள்ளி, குறிஞ்சிக்கிழவர் சிறுமி, கோலக் குறத்தி, அம் குறச் சிறுமான், வேடிச்சி, விளங்கு வள்ளி, காட்டிற் குறத்தி, செம்மான் மகள் என்று பல இயல்புகளையும் சொல்கிருர். முருகனை, ''வள்ளிக்கு வாய்த்தவனே!'' என்று அழைக்கிருர்,

# 6. திருவிளையாடல்களும் வீரச்செயல்களும்

முருகப் பெருமானுடைய திருவிளையாடல்களையும் வீரச் செயல்களையும் பாராட்டிப் பல வகையில் சொல்கிறார்.

கிரவுஞ்சம் அணுவாகிக் குலையவும் அரக்கர் அணிபட்டு அவர்கள் சேனை நெளியவும் செய்தான். அதனால் சூரன் பேரணி கெட்டது; தேவேந்திர லோகம் பிழைத்தது. சூரனைக் கொன்றதை வெவ்வேறு வகையில் எடுத்துக் காட்டுகிறார். சூரனை ஓரிமைப் போதினிற் கொன்றவன், அவுணர் மார்பில் பெருகிய இரத்தக் குளத்தில் குதித்துக் குளித்துக் களித்து வெற்றிக் களத்திற் கழுதாடச் செய்தவன். அவன் சூரனை அழித்ததனால் இந்திரன் பிழைத்தான்; அதனால் அவனுடைய மனைவியாகிய சசிதேவி மங்கல நாண் ரட்சிக்கப் பெற்றது. தன்னுடைய சுற்றத்துடன் வந்த சூரனுடைய மார்பும் கிரௌஞ்ச கிரியும் ஒரே சமயத்தில் ஊடுருவ வேலால் துளைத்தான்; அவுணர் குலம் முழுவதும் பொடியாக்கினான்; கிரவுஞ்ச கிரி பொட்டுப் பொட்டாக உதிரச்செய்தான்; சூரனை அழித்து அமராவதி கொண்ட கொற்றவனானான்.

வேல்பட்டுச் சமுத்திரமும் சூரனும் கிரவுஞ்ச மலையும் அழிந்தன; அசுரர் குலமுழுவதும் அஞ்சி நடுங்கி ஓலமிடச் செய்தான்; சமுத்திரத்தில் வேலை விட்டபொழுது சூரன்

நடுங்கிப் போனான்; கிரவுஞ்ச கிரி தவிடுபொடியாகிவிட்டது. அது ஆறு கூறாகப் பிளந்தது; அது கிழிந்ததுபோல விரைவில் அழிந்தது. அவன் வேலாயுதம் விட்டதனால் மலைகள் அற்றன; அவுணர் சிரங்கள் அற்றன; கடல் வறந்தது. இந்திராணியின் மங்கல நாணைக் காத்தான்.

கிருத்திகை மாதர் பாலை உண்பதற்காக விம்மி விம்மி அழுதான். அம் மாதர் பாலை உண்டு அது போதாமல் புவனங்கள் ஈன்ற பொற்பாவையாகிய அம்பிகையின் பாலை உண்டான். அவன் சப்பாணி கொட்டினான்; திசையில் உள்ள எட்டு மலைகளும் பாதி பாதியாய் விழுந்தனவாம்; மேருவும் குலுங்கியதாம். விண்ணோர் உய்ந்தனர். அவனுடைய பாதம் பட்டதனால் அருணகிரிநாதப் பெருமான் தலைமேல் அயன் எழுதிய எழுத்து அழிந்து விட்டதாம். பாதித் திருவுருப்பச் சென்றிருக்கும் சிவபிரானுக்கு உபதேசம் செய்தான். இதை, "தந்தைக்கு முன்னம் தனிஞான வாள் ஒன்று சாதித்தருள் கந்தச்சுவாமி" என்பதில் குறிப்பிடுகிறார். முருகன் செந்தமிழ் நூல் விரித்தவன். தேவர்களைச் சிறையினின்றும் மீட்பதற்காகத் தன் சிற்றடியில் பூங்கழல் கட்டிக் கொண்டான். அவன் விளையாடியபோது திண்கிரிகள் சிந்தின. அன்பர்களுக்குக் குருவடிவாய் வந்து உபதேசம் செய்வான். "எங்கே நினைப்பினும் அங்கே என் முன்வந் தெதிர் நிற்பனே" என்று அருணகிரியார் அவன் அருளைப் பாராட்டுகிறார்.

# 7. உபதேசம்

உலகத்தாருக்குப் பல வகையான உபதேசங்களைச் செய்கிறார். யாக்கை நிலையாதது என்கிறார்; வெய்யிற் கொதுங்க உதவா உடம்பு என்கிறார். பொருள் நிலையாமையைப் பலவாறு எடுத்து அறிவுறுத்துகிறார். கையில் பொருள் கடைவழிக்கு உதவாது; உங்கள் அத்த மெல்லாம் ஆழப் புதைத்து வைத்தால் வருமோ நும் அடிப்பிறகே? சுழித்தோடும் ஆற்றில் வரும் வெள்ளத்தைப் போன்றது செல்வம்; தேரிலும் கிரியிலும் பரியிலும் செல்பவர் செல்வமெல்லாம் நீரில் எழுத்துப் போன்றவை; உள்ளபோதே வறியவர்களுக்குக் கொடுக்காத செல்வம் பாதகத்தால் தேடிப் புதைப்பார்கள்; திருட்டிற் கொடுத்துத் திகைத்து இளைப்பார்கள்; வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பார்கள், 'பிறருக்குக் கொடுக்காமல் வைத்த பொன்னும் சிங்கார வீடும் மடந்தையரும் நிலையாக நிற்க முடியுமா?' என்று கேட்கிறார். உயிர் வேறு துணையின்றிப் போகும் தனிவழிக்குத் துணையாக இவைவாரா என்பதை அறிவுறுத்துகிறார். நில்லாது செல்வம் என்கிறார். 'காலன் உமைக் கொண்டு போம் அன்று பூண்பனவும்.... மாளிகையும் பணச் சாளிகையும் ஆர்கொண்டு போவர்?' என்று வினவுகிறார். (சாளிகை-பை.)

அறம் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தும் இடங்கள் பல. 'தானம் என்றும் இடுங்கோள்' என்கிறார். 'வேலோனை வாழ்த்தி வறிஞர்க் கென்றும், நொய்யிற் பிளவள வேனும்

பகிர்மின்கள்' என்று உபதேசிக்கிருர். நாம் நொய்யாற் கஞ்சி செய்து உண்ணும் வறிய நிலையில் இருந்தாலும் அப்போதும் ஒரு பங்கு அறம் செய்ய வேண்டும் என்பது அவர் கருத்து. அப்படிச் செய்தால் அது நாம் இறுதியில் போகும் தொலையா வழிக்குற்ற துணையாக வரும். நம் வறிய நிலையிலும் இலைக்கறியாவது வெந்தது ஏதாவது ஏற்றவற்குப் பகிர்ந்து அளிக்க வேண்டும். அதுவே ஒரு வகைத் தவம். உள்ள போதே கொடாதவர் பிறகு இம்மையிலும் அம்மையிலும் துன்புறுவார்கள். இரு பங்கு பொருள் சேர்த்து அதில் ஒரு பங்கு பிறருக்குக் கொடுத்துப் பிறகு உண்டு இருக்க வேண்டுமாம்; இதை, "இருபிடி சோறு கொண்டிட்டுண்டிரும்" என்று குறிப்பாகச் சொல்கிருர். அப்படிப் பிறருக்குக் கொடுக்காமல் இருந்து விட்டால், அந்த உணவை உண்ட உடம்பு இறுதியில் ஒரு பிடி சாம்பலும் காணுத மாய உடம்பு என்கிருர். முருகனிடம் போலி அன்பு காட்டுகிறவர்கள், யாராவது வந்து இரந்தால் எங்கேயோ போகவேண்டுமென்று அவசரமாக எழுந்து போய் விடுவார்களாம். அவர்கள் நிலையை, "எங்கேனும் எழுந்திருப்பார்; வேற்குமரற் கன்பிலாதவர் ஞானம் மிகவும் நன்றே!" என்று பரிகசிக்கிருர். இரப்பவர்களுக்கு இட்டது எங்காயினும் நமக்கு வேறு வகையில் வந்து உதவும். பிறருக்கு இட்டு அதனுல் வறுமை அடைந்தால் அதுசிறந்ததாம்;"இட்டு மிடிக்கின் றிலை நெஞ்சமே, தஞ்சமேது நமக்கினியே" என்று வேசாறுகிருர்.

மகளிர் மயலில் ஈடுபட்டாலும் வேலை மறவேன் என்கிருர்

இறைவன் திருவடியே வீடு என்பதை, "செக்கச் சிவந்த கழல்வீடு" என்று நினைப்பூட்டுகிருர். வீட்டிற் புகுவதற்கு எளிய வழி காட்டிற் குறத்தி பிரான் பதத்தே கருத்தைப் புகட்டுதல்; கருத்தைப் புகட்டுவது அரிதாயினும் அது கிட்டிவிட்டால் பின்பு வீடு கிடைப்பது எளிதாகி விடும்.

# தம்மை இழித்துக் கொள்ளல்

இறைவனிடம் இடைவிடாத பக்தி உடையவராயினும் அருணகிரிநாதர் தம்மை உயர்வாக எண்ணுமல் இழிவாகவே எண்ணிப் பேசுகிருர். இந்த நைச்சியாறு சந்தானம் ஞானிகளுக்கு இயல்பு.

'நான் சென்ற பிறவிகளிற் செய்த பேறு இல்லாதவன்; இந்தப் பிறவியில் தவம் செய்யாதவன்' என்கிருர். ஐந்து இந்திரியங்கள் அவரை நல்லதை நினைக்கச் செய்யாமலும், அதில் நிலைநிற்கச் செய்யாமலும், மலரிட்டு முருகனைத் தொழவொட்டாமலும் செய்கின்றன. உள்ளத்தில் பிரமம் கொண்டு அசட்டுக் கிரியைக்குள் தவிக்கிருராம். உலகத்தில் உள்ள பாச வாழ்க்கையில் பஞ்சேந்திரியங்களால் குழப்பம் அடைந்திருக்கிருர். பாசநெஞ்சராக உள்ளார். மங்கையரைப் புகழ்ந்து திரிகிருர். மங்கையர் தம் கண்ணுல் அவரைப் பதைக்கப் பதைக்க வளைக்கிருர்கள். இருங்காம விடாயில் பட்டு ஆருயிரைத் திருகிப் பருகிப் பசி தணிக்கும் கட்டாரி வேல் விழியார் மயலில் மனம் கட்டுண்டது. 'பக்தித்துறை இழிந்து ஆனந்த வாரி படிவதென்ருே?' என்று கேட்கிருர். அப்போது புத்தித்தரங்கம் தெளியுமாம். 'துன்பம் இன்பம் கழித்து ஓடுகின்ற காலம் எக்காலம்?' என்று ஏங்குகிருர். 'உதித்தாங் குழல்வதும் சாவதும் தீர்த்தெனை உன்னில் ஒன்ருய் விதித்தாண்டு அருள்தரும் காலம் உண்டோ?' என்று ஆராமையுடன் வினவுகிருர். பால்போன்ற மொழியுடைய

தி—2

பெண்களின் இன்பத்தால் மயக்கம் உற்று உய்யும் வழி தெரியாமல் இருக்கிறார். 'குமரனா பதாம்புயத்தை வணங்காத் தலை எனக்கு எங்கே வந்து வாய்த்தது?' என்று இரங்குகிறார். 'மாதர்பால் மயங்கும் மனோதுக்கம் மாய்வதற்கு என்று நீ யருள்வாய்?' என்று வினவுகிறார். 'புத்தியை வேறு இடங்களில் செல்லாமல் இழுத்து நின் பாதாம்புயத்தில் ஈடுபடச் செய்து முத்தியைப் பெற அறியவில்லையே!' என்று புலம்புகிறார். தம் நெஞ்சை, 'செல்வமெல்லாம் நீர்மேல் எழுத்துக்கு நேர் என்று அறியாத பாவி நெடு நெஞ்சமே' என்கிறார். 'எம்பெருமானே, செத்துப் போவதற்கும் மறுபடியும் பிறப்பதற்கும் அல்லாமல் தளர்ந்தவர்க்கு ஒன்றைக் கொடுப்பதற்கு எனக்கு அருள்புரியவில்லையே!' என்று ஏங்குகிறார். 'நான் உன்னைச் சிந்திக்கவில்லை; சேவிக்கவில்லை; தண்டைச் சிற்றடியை வந்திக்கவில்லை; உன்னைச் சிறிதும் வாழ்த்தவில்லை; உன்னைச் சந்திக்கவில்லை; பொய்யை நிந்தித்து உண்மையைச் சாதிக்கவில்லை. புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போகவில்லை' என்கிறார். 'நான் செய்த அன்பெல்லாம் பொய்யோ?' என்று ஐயுறுகிறார். 'பெறுவதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றும் முருகன் சிற்றடியைக் குறுகிப் பணியும் பேறு பெறவில்லை. பழனித்திருநாமம் படிக்கவில்லை; படிப்பவர் தாளையாவது சிரமேற் கொள்ளவில்லை. முருகா என்று ஓதவில்லை. பிறருக்கு இட்டு அதனால் வறுமையுறவில்லை. இப்படி இருக்கும் எனக்குத் தஞ்சம் ஏது?' என்று உளைகிறார்.

'இந்தப் பிரமன் எனக்கு உன் தாளைச் சூடாத தலையையும், பார்க்காத கண்ணையும், தொழாத கையையும், பாடாத நாவையும் படைத்திருக்கிறானே; அவனுக்கு நான் என்ன குற்றம் செய்தேன்?' என்று கேட்கிறார், 'நெஞ்சே, மாதர் மயலில் சிக்காது, முருகன் பூங்கழலை நோக்கு' என்று தம் நெஞ்சுக்குச் சொல்கிறார். பந்தாடும் மங்கையர்கள் கயல் போன்ற கண்பார்வையில் பட்டு உழலும் சிந்தாகுலம்

கொண்டவராம். அதைத் தீர்த்தருள வேண்டுமாம். 'உன்னை வணங்கித் துதிக்க அறியாத மனிதருடன் இணங்கிக் குணம் கேட்ட துஷ்டன் நான்' என்கிருர். சாது சங்கம் இல்லாமல் கெட்டுப் போனேன் என்பது கருத்து. பிரமனைக் குறை கூறுகிருர்; 'முருகனைக் கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்கிருர். முருகன் கண் கொள்ளாத பேரழகுடையவன் என்பதை இதனுல் புலப் படுத்துகிருர். 'பெண்களின் கண்ணையும், வஞ்சகமான சொற்களையும், புன்சிரிப்பையும் விரும்புகிற நெஞ்சமே, வள்ளி மணவாளனை விரும்பாமல் இருக்கிருயே!' என்று நெஞ்சத்தைக் குறைகூறுகிருர். 'நதியைப் போல நில்லாது ஓடும் பொய்யான வாழ்வில் அன்பு வைத்து, நரம்பால் பொதிந்த பொதியாகிய உடம்பைச் சுமந்து திண்டாடுமாறு விதி செய்து விட்டதே! இதை நொந்து நொந்து என் மனம் வேகின்றது' என்று நைகிருர். துணை ஏதும் இல்லாமல், தாவிப் படரக் கொழு கொம்பு இல்லாத தனிக் கொடி போல் பாவித் தனி மனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதாம். 'பிறருக்கு இடுவதைச் சற்றேனும் கருதேன்; போத கிலேன்; இப்படி இருப்பினும் என்னைத் தொண்டருள் ஒருவனுக வைத்து அவர்களோடு கூட்டி வைத்தாயே! உன் பேரருள் தான் என்னே!' என்று வியப்படைகிருர். 'உயிருக்கு எப்படியும் மோசம் வரும் என்று அறிந்து, உன் அரும்பதங் களைச் சேவிக்கவேண்டும் என்று நான் நினைக்க வில்லையே!' என்று இரங்குகிருர். 'இதற்குக் காரணமான என் பாவத்தைத் தீர்த்தருள வேண்டும்' என்று விண்ணப்பித்துக் கொள்கிருர். 'இருதலைக் கொள்ளி எறும்பு போல என் உள்ளம் குலைகின்றது; இந்தத் துயரத்தை ஒழித்து அருள் பாலிக்கவேண்டும்' என்று வேண்டுகிருர்.

# பிற தெய்வங்கள்

## சிவபெருமான்

இடையிடையே பல மூர்த்திகளை நினைந்து பாராட்டு கிறார். சிவபெருமானை, செஞ்சடாடவி மேல், ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின் கீற்றைப் புனைந்தபெருமான்; (இதழி கொன்றை.); தோரணியிட்டுப் புரம் எரித்தான்; கணபணக்கட் செவியாற் பணி அணி கோமான்; இருகோட்டு ஒருகைப் பொருபூதரம் உரித்து ஏகாசம் இட்ட புராந்தகன் (ஏகாசம்-மேற்போர்வை); இக்கு முல்லையுடன் பற்றுக்கையும் வெந்து சங்க்ராமவேளும் பட விழியாற் செற்றுன் (சங்க்ராமம்-போர்); ஆலுக்கணி கலம் வெண்டலை மாலை (ஆல் உட-ஆலடியில் உள்ள கடவுள்); பாதித் திருவுருப் பச்சென்றவர்; தந்தை; அராப்புனை வேணியன்; சுத்த நித்த முத்தித் தியாகப் பொருப்பு; த்ரிபுராந்தகன்; திரியம்பகன்; மைவரும் கண்டத்தர்; சங்குசக்ராயுதன் விரிஞ்சன் அறியாச் சூலா யுதன்; மன்ருடி; கடல்மீதெழுந்த ஆலங் குடித்த பெருமான்; பசுபதி.

## அம்பிகை

அம்பிகையை இவர் பாராட்டுவதைப்பார்க்கலாம். அவள் திருந்தப் புவனங்கள் ஈன்ற பொற் பாவை; ஒருவரைப்

யங்கில் உடையாள்; திருவுருப் பச்சென்றிருப்பவள்; பாடும் கவுரி; த்ரியம்பகனைப் பாகத்தில் வைக்கும் பரம கல்யாணி; உமை.

## திருமால்

திருமாலைப் பலவகையில் கொண்டாடுகிறார். முருகனுக்கு மாமனார் அல்லவா? மாமனாரைக் கொண்டாடினால் மாப்பிள்ளைக்குச் சந்தோஷந்தானே?

மாவலிபால் மூவடி கேட்டு அன்று மூதண்ட கூட முகடு முட்டச் சேவடி நீட்டும் பெருமாள் என்று திரிவிக்ரமாவதாரத்தைப் பாராட்டுகிறார்; கைதான் இருபதுடையான் தலை பத்தும் கத்தரிக்க எய்தான் என்று இராமவதாரத்தைச் சிறப்பிக்கிறார்; வெற்பு நட்டுரக பதித்தாம்பு வாங்கி நின்று அம்பரம் பம்பரம் பட்டுழல மதித்தான் என்றும், காலே மிக உண்டு காலே இலாத கணபணத்தின் மேலே துயில் கொள்ளும் மாலோன் என்றும், கவியால் கடல் அடைத்தோன் என்றும் சிறப்பிக்கிறார். பெரும்பாம்பில் நின்று நடித்தான் என்று காளிங்க நர்த்தனத்தைக் குறிப்பிடுகிறார்; இலங்கா புரிக்குப் போகைக்கு நீ வழி காட்டென்று போய்ச் கடல் தீக்கொளுந்த, வாளைச் சிலைவளைத்தோன் என்று இராம பிரான் புகழைச் சொல்கிறார்; அகிலம் உண்ட மால் என்றும், சங்கு சக்ராயுதன் என்றும், மாலோன் என்றும், கருமால் என்றும், மண் கமழ் உந்தித் திருமால் என்றும், தொல்லைப் பெருநிலம் சூகரமாய்க் கீன்றான் என்றும், காசினியைப் பாலிக்கும் மாயன் என்றும், கரி கூப்பிட்ட நாள் கராப்படக் கொன்று அக்கரி போற்ற நின்ற கடவுள் என்றும் புகழ் விரிக்கிறார்.

## பிரமன்

அயன் கையெழுத்து முருகன் கால் பட்டு அழிந்து விட்டதாம். கோடாத வேதனென்று சிறப்பிக்கிறார்.

விரிஞ்சன், பங்கேருகன், நான்முகன், அயன் என்பன அவர் பிரமனைக் குறித்துக் கூறும் திருநாமங்கள்.

## உடலின் இழிவு

இந்த உடம்பின் இழிவைப் புலப்படுத்தும் வகை பல.

இதில் உள்ள பஞ்சேந்திரியங்களும் நம்மை அலைக்கழிக்கின்றன. அந்த ஐவர்களால் இந்த உலக வாழ்க்கையில் குழப்பம் உண்டாகிறது. இந்த உடம்பு வெய்யிற் கொதுங்க உதவாவுடம்பு; இதன் நிழல் வெறும் நிழல்; ஐவர்க்கு இடம் பெறக் கால் இரண்டு ஒட்டி அதில் இரண்டு கைவைத்த வீடு; பொக்கக் குடில்; நிணம் காட்டும் கொட்டில்; என் கரங்கள் உன் முன் குவியாக் கரங்கள்; தோலால் சுவர் வைத்துப் பத்து வகையான வாயுவை வைத்து இருகாலால் எழுப்பி, வளை முதுகு ஒட்டி, கைநாற்றி நரம்பால் ஆக்கையிட்டுத் தசை கொண்டு வேய்ந்த அகம்; பூதவீடு; சாகையும் பிறக்கையும் உடையது; வினையினுல் விளைவது; இறந்தால் ஒரு பிடி சாம்பரும் காணுத மாய உடம்பு; இதனுல் உண்டாவது கிலேசம்; இந்த யாக்கை நீர்க் குமிழிக்கு நிகரானது; ஐவர் பராக்கினுல் கெடுவது; பதைக்கும் மனம் உடையது; 'முருகன் தாளைச் சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாத கையும் பாடாத நாவும் எனக்குப் பிரமன் படைத்தான்' என்கிறுர். ஐவரும் கைவிட்டு மெய்விடும் போது முருகன்தான் அடைக்கலம். நரம்பாற் பொதிந்த பொதி இவ்வுடம்பு; துட்ட நோய் அடைவது; ஆவிக்கு மோசம் வரும்.

# உபதேசம்

மக்கள் உய்ந்து நற்கதி அடைவதற்குரிய உபதேசங்களைச் செய்கிறார். அயில் வேலன் கவியை எழுத்துப் பிழையறக் கற்க வேண்டும்; மனத்தைத் தடுக்க வேண்டும்; வெகுளியை விடவேண்டும்; தானம் என்றும் இடுக; இருந்தபடி இருக்க வேண்டும்; அப்போது அருள் தானே வெளிப்படும். வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கு என்றும், நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்; கோழிக் கொடியன் அடி பணியாமல் உங்கள் பொருளைப் புதைத்து வைத்தால் இந்தப் பிறவியின்பின் வருமா? முருகன் திருநாமம் புகல்பவர் பிறவிக்கடலில் புகார்; மிடியால் விதனப்படார். தொண்டர் குழாம் சாரில் கதி அன்றி வேறு இல்லை. முருகனை வணங்கி, ஏற்றவர்க்கு இலையாயினும் வெந்தது ஏதாயினும் பகிர்ந்து இடுங்கள்; அதுவே ஒருவகைத் தவம்; அது நிலையானது. குமரனை எண்ணிக் கசிந்துருகி உள்ளபோதே கொடாதவர் பாதகத்தால் தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே. ஆங்காரமும் அடங்கவேண்டும்; பரமானந்தத்தே தேங்குக; நினைப்பும் மறப்புமாகிய சகல கேவலங்கள் அறவேண்டும்; இல்லையேல் எமதூதருக்கு அஞ்சும்படி நேரும். முருகன் கவி கேட்டு உருகி இழியும் கவி சுற்றிடாதிருப்பீர் சண்முகவா எனச் சாற்றி நித்தம், இருபிடி சோறு கொண்டிட்டுண்டிடும்; ஏற்பவர்க் கிட்டது முருகன் அருள் போல் எங்காயினும் வரும்; முருகன் சரணத்திலே

ஓடும் கருத்தை இருத்த வல்லார்க்கு உகம் போய்ச் சகம் போய்ப் பாடும் கவுரி பவுரி கொண்டாடப் பசுபதி நின்றுடும் பொழுது பரமாயிருக்கும் அதீதத்திலே; குருநாதன் சொன்ன கருத்தை மனத்தில் இருத்தும் கண்டீர், முத்தி கை கண்டது; மயில்வாகனனைச் சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லையே. இராப்பகலற்ற இடத்தே இருத்தல் எளிதல்லவே. இட்டு மிடிக்கின்றனை. முருகனை வாழ்த்துவது கைவரும் தொண்டு; முருகன் பதத்தே கருத்தைப் புகுத்தின் வீட்டில் புகுதல் மிக எளிது; அன்பு குன்றி யோகம் செய்வதால் பயன் இல்லை. செங்கோடனை வாழ்த்துகை சால நன்றே;யான் தான் எனும் சொல் இரண்டும் கெட்டால் அன்றி யாவருக்கும் தோன்றுது சத்தியம், சலங்காணும் வேந்தர்தமக்கும் அஞ்சார், எமன் சண்டைக் கஞ்சார், துலங்கா நரகக் குழியணுகார், துட்ட நோயணுகார், கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும் கந்தன் நன்னூல் அலங்காரம் நூற்றுள் ஒரு கவிதான் கற்றறிந்தவரே. ஆவிக்கு மோசம் வருமாறறிந்து முருகன் அருட்பதங்கள் சேவிக்க வேண்டும்; அறுமுகவன் வேலும் திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த்துணையே.

## துணை

பல வகையான துணைகள் நமக்கு வேண்டும். தொண்டர் குழாம் சாரின் கதியுண்டு; இரப்பவர்க்கு ஈவது தொலையா வழிக்குத் துணை; விழிக்குத் துணை முருகன் மென்மலர்ப் பாதங்கள்; மெய்ம்மை குன்றா மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்; முன்பு செய்த பழிக்குத் துணை அவன் பன்னிரு தோள்கள்; பயந்த வழிக்குத் துணை வடிவேலும் மயூரமுமே.

## கால பயம் இன்மை

முருகனை வணங்குவதனால் கால பயம் இராது என்பதைக் காலனை முன்னிலைப் படுத்தியும் படர்க்கையில் வைத்தும் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

மரணப்ரமாதம் நமக்கு இல்லையாம்; இந்த உடம்பாகிய வீடு குலையுமுன்னே காத்தருள்வான்; யமனே தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி உன்னைத் திண்டாட வெட்டி விழ விடுவேன். வந்துபார் சற்றேன் கைக்கு எட்டவே. சிவயோகிகளே காலத்தை வென்றிருப்பார். ஓலையும் தூதரும் கண்டு திண்டாடல் ஒழித்து எனக்கு எப்போதும் முருகன் உருவம் முன் நிற்கும். முடியாப் பிறவிக் கடலிற் புகார். கொடுங்கூற்று என் செயும்? சாவதும் தீர்த்துக் கூற்றுவன் பாசத்திற் பிடிக்கும் பொழுது வந்தஞ்சல் என்பாய்; கூற்றுவன் ஊர்க்குச் செல்லும் வழியும் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே. 'பட்டிக் கடாவில் வரும் அந்தகா, உனைப் பார் அறிய வெட்டிப் புறங்கண்டலாது விடேன்.' வெட்டும் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன் விடும்கயிற்றால், கட்டும் பொழுது விடுவிக்க வேண்டும்; காலன் வெம்பி வந்திப் பொழுதெனை என் செயலாம்? சத்தி வாள் ஒன்றினால் சிந்தத் துணிப்பன் துணிப்பரும் கோபத்தி சூலத்தையே; மாகத்தை முட்டி வரும் நெடுங்கூற்றன் வந்தாலென் முன்னே, தோகைப் புரவியிற் றோன்றி நிற்பாய்; 'வாராதகல் அந்தகா, வந்தபோதுயிர் வாங்குவனே' மெய்விடும் போதுன் அடைக்கலமே. என்பால் ஆயுதம் வருமோ எமனோடு பகைக்கினுமே? திருமுகம் ஆறும் கண்ட தபோதனர்க்கு இங்கு எமராசன் விட்ட கடையேடு வந்து இனி என்செயுமே? பிறவி அற இச்சிறை விடுதலைப் பட்டது எமன்சண்டைக் கஞ்சார். சூலம் பிடித்தெம பாசம் சுழற்றித் தொடர்ந்து வரும் காலன் தனக்கொரு காலும் அஞ்சேன்.

# அநுபவம்

இவ்வளவும் சொன்னவர் நம்முடைய அநுபவத்தைச் சொல்கிருர். முன்னுலே சொன்ன குறைகளை உடையவர்களுக்கு இத்தகைய அநுபவம் கிட்டாது. மற்றவர்களுக்காகச் சொன்னவை அவை. உண்மையான அருணகிரிநாதரை இந்த அநுபவங்களைச் சொல்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

திருவண்ணுமலையில் முருகனைக் கண்டவர் அருணகிரிநாதர். முருகன் ப்ரபஞ்ச மென்னும் சேற்றைக் கழிய வழி விட்டான்; அதனை அறிந்து அவனே அருளை வியந்தார்; "வழிவிட்டவா!" என்கிருர். குமரனை மெய்அன்பினல் மெல்ல மெல்ல உள்ளக் கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்து அறக் கைத்தன.

முருகன் அருணகிரிநாதருக்கு உபதேசம் செய்தான். அவரே இதைச் சொல்கிருர்.

ஒளியில் விளைந்த ஞான பூதரத் துச்சியின் மேல், அளியில் விளைந்ததோர் ஆனந்தத் தேனை, அநாதியிலே வெளியில் விளைந்த வெறும் பாழைப் பெற்ற வெறுந்தனியைத் தெளிய விளம்பினன். 'வள்ளிகோன் அன்று போதித்த தொன்றுண்டு; கூறவற்ருே?' என்று சொல்கிருர். இது அன்று, அது அன்று என்கின்ருர்; 'வானன்று, காலன்று, தீயன்று, நீரன்று, மண்ணும் அன்று, தானன்று, நானன்று, அசரீரி அன்று, சரீரி அன்றே.' 'என்னுடைய துன்பங்களெல்

லாம் போக நான் கேட்கும் படி ஓர் இரகசியத்தைச் சொன்னான்' என்கிறார். குருநாதன் சொன்ன சீலத்தை மெல்லத் தெளிந்தறிவார் சிவயோகிகளே, காலத்தை வென்றிருப்பார். 'ஒரு பூதரும் அறியாத் தனிவீட்டில் உரை உணர்வு அற்று இரு, பூதவீட்டில் இராமல்' என்றான். வேலவன் போதித்தது என்ன வியப்பு? பஞ்ச பூதமற்று, உரையற்று, உணர்வற்று, உயிரற்று, உபாயமற்று, கரையற்று, இருள் அற்று, எனதற்று இருக்கும் அக்காட்சியை அவன் போதித்தான். சிவயோக மென்னும் குருத்தை அறிந்து முகம் ஆறுடைக் குருநாதன் சொன்ன கருத்தை மனத்தில் இருத்தினால் முத்தி கைகண்டதே. திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம்பூடுருவப், பொருவடி வேலும் கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும் குருவடிவாய் வந்து அவர் உள்ளம் குளிரக் குதிகொண்டன.

தேசிகனாக முருகன் உபதேசம் செய்ய அருணை மாமுனிவர் அடைந்த பேரானந்த அநுபவத்தைச் சொல்லினால் சொல்ல முடியுமா? 'சொல்லுகைக்கு இல்லை' என்று அவரே சொல்கிறார். ஆனாலும் ஒருவாறு தாம் பெற்ற அநுபவங்களைச் சொல்கிறார்.

இந்த உடம்பில் இருக்கும்போதே இறையருள் இன்பத்தை அடைய வழிகாட்டுவது நம் சமயம். அவ்வாறு பெற்ற இன்பத்தை ஒருவாறு சொல்கிறார் அருணகிரிநாதப் பெருமான்.

'சொல்லுகைக்கு இல்லை என்று எல்லாம் இழந்து சும்மா இருக்கும் எல்லையில் செல்ல என்னை விட்டான். அது என்ன ஆச்சரியம்!' என்று அருளுகிறார். அந்த இன்பம் அயலார்க்குத் தெரியாதாம்; 'வேலாயுதன் வெட்சித் தண்டைப் பாதாரவிந்தம் அரணாக அல்லும் பகலும் இல்லாச் சூதான தற்ற வெளிக்கே ஒளித்துச் சும்மா இருக்கப்

போதாய்; இனி மனமே, தெரியாதொரு பூதர்க்குமே.' ஆனந்த அநுபவத்தில் உடம்பே மறந்து போயிற்றும்,

'மவுனத்தை உற்று, நின்னை உணர்ந்துணந்து எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு, என்னைமறந்திருந்தேன் இறந்தே விட்ட திவ்வுடம்பே.' அந்த ஞானம் அவிரோத ஞானம். தாமே அநுபவித்தாலன்றிச் சொல்ல முடியாத இன்பம் அவர் பெற்ற அநுபவம். 'மாலே கொள இங்ஙன் காண்பதல்லால் மனவாக்குச் செயலாலே அடைதற் கரிதாய் அருவுருவாகி ஒன்று போலே இருக்கும் பொருளை எவ்வாறு புகல்வது?' காம சமுத்திரத்தை அவர் கடந்து விட்டார். தப்பிப்போன மனத்துக்கு எட்டாத ஞானகலை அவர் கண்ட கலை. பத்தித்துறை இழிந்து ஆனந்த வாரி படிந்து புத்தித் தரங்கம் தெளிந்தது.

'கலவிக்கள்ளை மொண்டுண்டு அயர்கினும் வேல்மறவேன்' என்கிருர், அயர்கினும் என்பது அயர்வதில்லை என்ற குறிப்பை உடையது. 'நாள் என் செயும்? வினைதான் என் செயும்? எனை நாடி வந்த கோள் என் செயும், கொடுங் கூற்று என் செயும்?' என்று இறுமாந்து வினவுகிருர். பிறப்பு இறப்பை விட்டு முருகனேடு ஒன்ருக ஒன்றியவர் அவர். அவன் கால் பட்டு அவர் தலையெழுத்தாகிய பிராரப்தகர்மமும் அழிந்து விட்டதாம், பிராரப்தம் அநுபவித்தே தீரவேண்டும் என்பர். ஆனல் அருணை முனிவர் அதையும் வென்றுவிட்டார். முருகனே ஞான சொரூபி என்று உணர்ந்தார். பத்தித்துறை இழிந்து ஆனந்தவாரி படிந்தார்; அப்போது தித்தித்திருக்கும் அமுதாகிய அநுபவத்தைக் கண்டார். அதுவே பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த் தித்தித்திருக்கும் அமுது. புத்திக்கமலத்து உருகிப் பெருகிப் புவனத்தையே எற்றித் தந்திக் கரை புரளும் பரமானந்த சாகரத்தில் அந்த அமுதை உண்டார். புத்தியை வாங்கி முருகன் பாதாம்புயத்தில் புகட்டி அன்பால் முத்தியை வாங்க அறிந்தவர். தொண்டர்குழாத்

தோடு சார்ந்து நின்றார். ஆங்காரம் அடங்கி ஒடுங்கினவர்; பரமானந்தத்தே தேங்கினவர்; நினைப்பும் மறப்பும் அறப் பெற்றவர். ஓங்காரத் உள் ஒளிக் குள்ளே முருகன் உருவங் கண்டு தூங்காமல் தூங்கினவர். தொழும்பு பல செய்தவர், யமனுக்கு அஞ்சாதவர். மெய்யன்பு பூண்டவர். முருகன் சரணத்திலே ஓடும் கருத்தை இருத்த வல்லார்; ஆதலின் காலதேசவர்த்தமானம் அற்றன. 'உகம் போய்ச் சகம் போய்ப் பாடும் கவுரி பவுரிகொண்டாடப் பசுபதிநின்று ஆடும் பொழுது பரமாய் இருக்கும் அதீதத்திலே' என்று அந்த இன்பத்தைச் சொல்கிறார். அவர் பெற்ற ஆனந்தம் சொல்ல ஒண்ணாததாம்; 'போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும், வாக்கும் வடிவும், முடிவு மில்லாதொன்று வந்து வந்து தாக்கும்; மனோலயம் தானே தரும்; எனைத் தன்வசத்தே ஆக்கும், அறுமுகவா; சொல்லொணா திந்த ஆனந்தமே.' இந்தப் பாட்டைப் படிக்கும் போதே ஒரு கிளுகிளுப்பு நமக்கு ஏற்படுகிறது.

பஞ்சேந்திரியங்களின் பராக்கற்றவர்; மனப்பதைப்பு அற்றவர். அதனால் இராப்பகல் என்னும் சகல கேவலமற்ற இடத்தில் இருப்பவர். பரமானந்தம் மேற் கொள விம்மி விம்மி நடனம் ஆடினவர். கடம்பையும் நெஞ்சையும் முருகன் தாளிணைக்கே புகட்டிப் பணிந்தவர். கந்தா என்று வாழ்த்தும் இந்தக் கைவரும் தொண்டையல்லாமல் வேறு ஒன்றையும் அறியாதவர். எப்போதும் குறத்தி பிரான் பதத்தே கருத்தைப் புகட்டினவர். முருகன் அருளையே கவசமாகப் பெற்றவர். இனிப் பிறவாதவர். முருகனை வாழ்த்துதல் சால நன்று என்று உணர்ந்தவர். வள்ளியை வேட்டவன் தாள் வேட்கும் வேட்கையையன்றி வேறறி யாதவர். யான், அவன் என்னும் இரண்டும் கெட்டவர். அதனால் முருகனைத் தனிவெளியிலே சந்திக்கும் பாக்கியம் பெற்றார். முருகன் கமலக்கழலை இடை விடாது சிந்திப் பதனாலும் தொண்டர் கூட்டத்திற் சேர்ந்ததனாலும் அவர்

பெற்றஇன்பம் பெரிது. இராப்பகல் அற்றஇடம்காட்டி அங்கே இருந்து துதிக்கும் பேற்றை அடைந்தவர். அவருக்கு, முருகனுடைய வடிவேலும் திருமுகமும் பன்னிரு தோளும் எங்கே நினைத்தாலும் அங்கே முன் வந்து நின்றன. ஆவிக்கு மோசம் வருமாறு அறிந்தவர். ஆகவே முருகனுடைய அருட் பதங்களை உள்ளும் புறம்பும் சேவித்து இன்பம் கண்டவர்.

இவ்வாறு முருகனை உருவமாகவும் அருவமாகவும் அருள் வடிவாகவும் ஆனந்த சாகரமாகவும் கண்டு உணர்ந்து அநுபவித்து இந்த அற்புதமான நூலை வழங்கி யிருக்கிறார் அருணை முனிவர். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!' என்பது மெய்ஞ்ஞானிகளின் கருத்தாகையால் இவ்வாறு தம் அநுபவங்களைச் சொல்லி, 'நாமும் இந்த வழியிற் சென்று பரமானந்த சாகரத்தில் மூழ்க மாட்டோமா?' என்ற ஆவலை உண்டாக்குகிறார். அநுபவத் தைத் தாம் அநுபவித்ததோடு நிறுத்திக் கொள்ளாமல் பிறருக்கும் வழிகாட்டுபவர்கள் பரமஹம்ஸர்கள். அருணகிரி நாதப் பெருமான் ஒரு மெய்ஞ்ஞானி, மேலான பக்தர், ஜீவன்முக்தர், பரமஹம்சர். அவர் திருவாய் மலர்ந்தருளிய அலங்காரத்தைப் படிப்பதே புண்ணியம்; படித்து உணர்வதால் நல்லறிவும் அருளும் கிடைக்கும். தமிழில் இந்த நூல் அமைந்தது தமிழர் செய்த புண்ணியப் பயன்.

# கந்தர் அலங்காரம்

## (காப்பு)

அமல்அரு ணைத்திருக் கோபுரத்தே அந்த வாயிலுக்கு
வடஅரு கிற்சென்று கண்டுகொண்டேன், வரு
வார்தலையில்
தடப டெனப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

## (நூல்)

பேற்றைத் தவம் சற்றும் இல்லாத
என்னை ப்ரபஞ்சம் என்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட
வா! செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத்
தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான்
குமாரன் க்ருபாகரனே. (1)

அழித்துப் பிறக்கஒட் டாஅயில்
வேலன் கவியைஅன்பால்
எழுத்துப் பிழைஅறக் கற்கின்றி
லீர்எரி மூண்டதென்ன

விழித்துப் புகைஎழப் பொங்குவெம்
கூற்றன் விடும்கயிற்றால்
கழுத்தில் சுருக்கிட் டிழுக்கும்அன்
றேகவி கற்கின் றதே? (2)
தேர்அணி இட்டுப் புரம் எரித்
தான்மகன் செங்கையில்வேற்
கூர்அணி யிட்டணு ஆகிக்
க்ரௌவுஞ்சம் குலைந்தரக்கர்
நேர்அணி இட்டு வளைந்த
கடகம் நெளிந்தது; சூர்ப்
பேர்அணி கெட்டது தேவேந்த்ர
லோகம் பிழைத்ததுவே. (3)
ஓரஒட் டார்,ஒன்றை உன்னஒட்
டார்,மலர் இட்டுனதாள்
சேரஒட் டார்ஐவர்; செய்வதென்
யான்? சென்று தேவர்உய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக்
கார்உடல் சோரிகக்கக்
கூரகட் டாரிஇட் டோர்இமைப்
போதினில் கொன்றவனே! (4)
திருந்தப் புவனங்கள் ஈன்றபொற்
பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில்
ஏறி அறுவர்கொங்கை
விரும்பிக் கடல்அழக் குன்றழச்
சூர்அழ விம்மிஅழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவன்என்
றோதும், குவலயமே. (5)

பெரும்பைப் புனத்தினுள் சிற்றேனல்
காக்கின்ற பேதைகொங்கை
விரும்பும் குமரனை மெய்அன்பி
னால்மெல்ல மெல்லஉள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம்
தித்தித் தறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச்செந் தேனும்
புளித்தறக் கைத்ததுவே. (6)

சளத்தில் பிணிபட் டசட்டு
க்ரியைக்குள் தவிக்கும்என்றன்
உளத்தில் ப்ரமத்தைத் தவிர்ப்பாய்;
அவுணர் உரத்துதிரக்
குளத்தில் குதித்துக் குளித்துக்
களித்துக் குடித்துவெற்றிக்
களத்தில் செருக்கிக் கழுதாட
வேல்தொட்ட காவலனே. (7)

ஒளியில் விளைந்த உயர்ஞான
பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததோர் ஆனந்தத்
தேனை, அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப்
பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுகம்
ஆறுடைத் தேசிகனே! (8)

தேன்என்று பாகென் றுவமிக்கொ
ணாமொழித் தெய்வவள்ளி

கோன்அன் றெனக்குப தேசித்த
தொன்றுண்டு; கூறவற்றோ?
வான்அன்று, கால்அன்று, தீஅன்று,
நீர்அன்று, மண்ணும்அன்று,
தான்அன்று, நானன் றசரீரி
அன்று, சரீரிஅன்றே. (9)

சொல்லுகைக் கில்லைஎன் றெல்லாம்
இழந்துசும் மாஇருக்கும்
எல்லையில் செல்ல எனைவிட்ட
வா! இகல் வேலன், நல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக்
கல்வரைச் கொவ்வைச்செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத்
தோள்அண்ணல் வல்லபமே! (10)

குசைநெகி ழாவெற்றி வேலோன்
அவுணர் குடர்குழம்பக்
கரிசஇடு வாசி விசைகொண்ட
வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது
மேரு; அடிஇடஎண்
திசைவரை தூள்பட்ட; அத்தூளின்
வாரி திடர்பட்டதே. (11)

படைபட்ட வேலவன் பால்வந்த
வாகைப் பதாகைஎன்னும்
தடைபட்ட சேவல் சிறகடிக்
கொள்ளச் சலதிகிழிந்

துடைபட்ட தண்ட கடாகம்;
உதிர்ந்த துடுபடலம்;
இடைபட்ட குன்றமும் மாமேரு
வெற்பும் இடிபட்டவே. (12)

ஒருவரைப் பங்கில் உடையாள்
குமாரன் உடைமணிசேர்
திருஅரைக் கிண்கிணி ஓசை
படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட்
டெட்டுவெற் பும்கனகப்
பருவரைக் குன்றும் அதிர்ந்தன;
தேவர் பயம்கெட்டதே (13)

குப்பாச வாழ்க்கையில் கூத்தாடும்
ஐவரிற் கொட்புடைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்று
வாய், இரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ, மேரும்
குலுங்க, விண் ணாரும்உய்யச்
சப்பாணி கொட்டிய கைஆ
றிரண்டுடைச் சண்முகனே. (14)

தாவடி ஓட்டும் மயிலிலும்
தேவர் தலையிலும்என்
பாவடி ஏட்டிலும் பட்டதன்
றோபடி மாவலிபால்
மூஅடி கேட்டன்று மூதண்ட
கூட முகடு முட்டச்

சேவடி நீட்டும் பெருமாள்
மருகன்றன் சிற்றடியே. (15)

தடுங்கோள் மனத்தை; விடுங்கோள்
வெகுளியைத் தானம்என்றும்
இடுங்கோள், இருந்த படிஇருங்
கோள்;எழு பாரும்உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றம்
திறக்கத் தொளைக்கவைவேல்
விடும்கோன் அருள்வந்து தானே
உமக்கு வெளிப்படுமே. (16)

வேதா கமசித்ர வேலா
யுதன்வெட்சி பூத்ததண்டை
பாதார விந்தம் அரணாக,
அல்லும் பகலும்இல்லாச்
சூதான தற்ற வெளிக்கே
ஒளித்துச்சும் மாஇருக்கப்
போதாய் இனிமன மே; தெரி
யாதொரு பூதர்க்குமே. (17)

வையிற் கதிர்வடி வேலோனை
வாழ்த்தி, வறிஞர்க்கென்றும்
நொய்யில் பிளவள வேனும்
பகிர்மின்கள்; நுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா
உடம்பின் வெறுநிழல்போல்
கையில் பொருளும் உதவாது
காண், நும் கடைவழிக்கே. (18)

சொன்ன கிரௌஞ்ச கிரிஊ
டுருவத் தொளைத்தவைவேல்
மன்ன, கடம்பின் மலர்மாலை
மார்ப,மௌ னத்தைஉற்று
நின்னை உணர்ந்துணர்ந் தெல்லாம்
ஒருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேன்;இறந்
தேவிட்ட திவ்வுடம்பே. (19)

கோழிக் கொடியன் அடிபணி
யாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதிஇலி
காள்,உங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி துண்ணஒட்
டாதுங்கள் அத்தம்எல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு
மோநும் அடிப்பிறகே. (20)

மரணப்ர மாதம் நமக்கில்லை
யாம்;என்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலும்உண்
டே;கிண் கிணிமுகுள
சரணப்ர தாப, சசிதேவி
மங்கல்ய தந்துரட்சா
பரணக்ரு பாகர, ஞானா
கர,சுர பாஸ்கரனே, (21)

மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன், முத்தமிழால்

வைதா ரையும்அங்கு வாழவைப்
போன்,வெய்ய வாரணம்போல்
கைதான் இருப துடையான்
தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன், உமையாள்
பயந்தஇலஞ் சியமே. (22)

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
வாழும் செழுஞ்சுடரே,
வைவைத்த வேற்படை வானவ
னே,மற வேன்உனை நான்;
ஐவர்க் கிடம்பெறக் கால்இரண்
டோட்டி, அதில்இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னேவந்து காத்தருளே. (23)

கின்னம் குறித்தடி யேன்செவி
நீஅன்று கேட்கச்சொன்ன
குன்னம் குறிச்சி வெளிஆக்கி
விட்டது; கோடுகுழல்
சின்னம் குறிக்கக் குறிஞ்சிக்
கிழவர் சிறுமிதனை
முன்னம் குறிச்சியில் சென்றுகல்
யாணம் முயன்றவனே. (24)

தண்டா யுதமும் திரிசூ
லமும்விழத் தாக்கிஉன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு
வேன்;செந்தில் வேலனுக்குத்

தொண்டா கியஎன் அவிரோத
ஞானச் சுடர்வடிவாள்
கண்டாய் அடா, அந்த கா,வந்து
பார், என்றன் கைக்கெட்டவே. (25)

நீலச் சிகண்டியில் ஏறும்
பிரான், எந்த நேரத்திலும்
கோலக் குறத்தி யுடன்வரு
வான், குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி
வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்; மரிப்
பார், வெறும் கர்மிகளே. (26)

ஓலையும் தூதரும் கண்டுதிண்
டாடல் ஒழித்தெனக்குக்
காலையும் மாலையும் முன்நிற்கு
மே, கந்த வேள்மருங்கில்
சேலையும் கட்டிய சீராவும்
கையில் சிவத்தசெச்சை
மாலையும் சேவல் பதாகையும்
தோகையும் வாகையுமே. (27)

வேலே விளங்குகை யான்செய்ய
தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளஇங்ஙன் காண்பதல்
லால், மன வாக்குச்செய
லாலே அடைதற் கரிதாய்
அருவுரு ஆகிஒன்று

போலே இருக்கும் பொருளைஎவ்
வாறு புகல்வதுவே? (28)

கடத்தில் குறத்தி பிரான்அரு
ளால்கலங் காதசித்தத்
திடத்தில் புணைஎன யான்கடந்
தேன், சித்ர மாதர்அல்குற்
படத்தில், கழுத்தில், பழுத்தசெவ்
வாயில், பணையில், உந்தித்
தடத்தில், தனத்தில் கிடக்கும்வெங்
காம சமுத்திரமே. (29)

பால்என் பதுமொழி, பஞ்சென்
பதுபதம், பாவையர்கண்
சேல்என்ப தாகத் திரிகின்ற
நீ, செந்தி லோன்திருக்கை
வேல்என்; கிலை; கொற் றமயூரம்
என்கிலை; வெட்சித்தண்டைக்
கால்என் கிலை; மன மே, எங்ங
னேமுத்தி காண்பதுவே? (30)

பொக்கக் குடிலில் புகுதா
வகைபுண்ட ரீகத்தினும்
செக்கச் சிவந்த கழல்வீடு
தந்தருள்; சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட்
டுதிரம் குமுகும்எனக்
கக்கக் கிரிஉரு வக்கதிர்
வேல்தொட்ட காவலனே. (31)

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார்
புடன்கிரி ஊடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேற்கந்த
னே, துறந் தோர்உளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப்
பதைக்க வதைக்கும்கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னை எந்
நாள்வந் திரட்சிப்பையே? (32)

முடியாப் பிறவிக் கடலில்பு
கார்; முழு தும்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்
படார்; வெற்றி வேற்பெருமாள்,
அடியார்க்கு நல்ல பெருமாள்,
அவுணர் குலம்அடங்கப்
பொடிஆக் கியபெரு மாள்திரு
நாமம் புகல்பவரே. (33)

பொட்டாக வெற்பைப் பொருதகந்
தா, தப்பிப் போனதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு
வாய், இரும் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப்
பருகிப் பசிதணிக்கும்
கட்டாரி வேல்விழி யார்வலைக்
கேமனம் கட்டுண்டதே. (34)

பத்தித் துறைஇழிந் தானந்த
வாரி படிவதனால்

புத்தித் தரங்கம் தெளிவதென்
றோ?பொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூர
னைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரம் கொண் டமரா
வதிகொண்ட கொற்றவனே. (35)

சுழித்தோடும் ஆற்றில் பெருக்கா
னது செல்வம்; துன்பம் இன்பம்
கழித்தோடு கின்றதெக் காலம்?நெஞ்
சே,கரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோடன்
என்கிலை; குன்றமெட்டும்
கிழித்தோடு வேல்என் கிலை;எங்ங
னேமுத்தி கிட்டுவதே? (36)

கண்டுண்ட சொல்லியர்,•மெல்லியர்
காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும், வேல்மற
வேன்;முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடு
டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி ஆடவெஞ்
சூர்க்கொன்ற ராவுத்தனே. (37)

நாள்என் செயும்?வினை தான்என்
செயும்?எனை நாடிவந்த
கோள்என் செயும்? கொடுங் கூற்றென்
செயும்?கும ரேசர்இரு

தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே. (38)

உதித்தாங் குழல்வதும் சாவதும்
தீர்த்தெனை உன்னில்ஒன்றாய்
விதித்தாண் டருள்தரும் காலம்உண்
டோ?வெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம்
பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமருகா, மயில்
ஏறிய மாணிக்கமே. (39)

சேல்பட் டழிந்தது, செந்தூர்
வயற்பொழில்; தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது, பூங்கொடி
யார்மனம்; மாமயிலோன்
வேல்பட் டழிந்தது, வேலையும்
சூரனும் வெற்பும்;அவன்
கால்பட் டழிந்ததிங் கென்தலை
மேல்அயன் கையெழுத்தே. (40)

பாலே அனைய மொழியார்தம்
இன்பத்தைப் பற்றிஎன்றும்
மாலேகொண் டுய்யும் வழிஅறி
யேன்;மலர்த் தாள்தருவாய்;
காலே மிகஉண்டு காலே
இலாத கணபணத்தின்

மேலே துயில்கொள்ளும் மாலோன்
மருக,செவ் வேலவனே. (41)

நிணம்காட்டும் கொட்டிலை விட்டொரு
வீடெய்த நிற்கநிற்கும்
குணம்காட்டி ஆண்ட குருதேசி
கன், அம் குறச்சிறுமான்
பணம்காட்டும் அல்குற் குருகும்
குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே
எனக்கிங்ஙன் வாய்த்ததுவே? (42)

கவியால் கடல்அடைத் தோன்மரு
கோனைக் கணபணக்கட்
செவியால் பணிஅணி கோமான்
மகனைத் திறல்அரக்கர்
புவிஆர்ப் பெழத்தொட்ட போர்வேல்
முருகனைப் போற்றிஅன்பால்
குவியாக் கரங்கள்வந் தெங்கே
எனக்கிங்ஙன் கூடியவே? (43)

தோலால் சுவர்வைத்து நாலாறு
காலில் சுமத்திஇரு
காலால் எழுப்பி வளைமுது
கோட்டிக்கைந் நாற்றிநரம்
பால்ஆர்க்கை இட்டுத் தசைகொண்டு
வேய்ந்த அகம்பிரிந்தால்
வேலால் கிரிதொளைத் தோன்இரு
தாள்அன்றி வேறில்லையே. (4)

ஒருபூ தரும்அறி யாத்தனி
வீட்டில், உரைஉணர்வற்
றிரு,பூத வீட்டில் இராமல்என்
றுன்,இரு கோட்டொருகைப்
பொருபூ தரம்உரித் தேகாசம்
இட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவன், நிட்டூர
சூர குலாந்தகனே. (45)

நீயான ஞான விநோதந்
தனைஎன்று நீஅருள்வாய்?
சேயான வேற்கந்த னே,செந்தி
லாய்,சித்ர மாதர்அல்குல்
தோயா உருகிப் பருகிப்
பெருகித் துவளும்இந்த
மாயா விநோத மனோதுக்கம்
ஆனது மாய்வதற்கே. (46)

பத்தித் திருமுகம் ஆறுடன்
பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண்
டேன்,செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப்
பெருகிப் புவனம்எற்றித்
தத்திக் கரைபுர ளும்பர
மானந்த சாகரத்தே. (47)

புத்தியை வாங்கிநின் பாதாம்
புயத்தில் புகட்டிஅன்பாய்

முத்தியை வாங்க அறிகின்றி
லேன்;முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ?
குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னே,வினை
யேற்கென் குறித்தனையே? (48)

சூரில் கிரியில் கதிர்வேல்
எறிந்தவன் தொண்டர்குழாம்
சாரில் கதிஅன்றி வேறிலை
காண்;தண்டு தாவடிபோய்த்
தேரில் கரியில் பரியில்
திரிபவர் செல்வம்எல்லாம்
நீரில் பொறிஎன் றறியாத
பாவி நெடுநெஞ்சமே (49)

படிக்கும் திருப்புகழ் போற்றுவன்;
கூற்றுவன் பாசத்தினல்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சல்என்
பாய்;பெரும் பாம்பில்நின்று
நடிக்கும் பிரான்மருகா,கொடுஞ்
சூரன் நடுங்கவெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில்
ஏறும் இராவுத்தனே. (50)

மலை ஆறு கூறெழ வேல்வாங்கி
னனை வணங்கிஅன் பின்
நிலையான மாதவம் செய்குமி
னே;நும்மை நேடிவரும்

தொலையா வழிக்குப் பொதிசோறும்
உற்ற துணையும்கண்டீர்,
இலைஆயி னும்வெந்த தேதா
யினும்பகிர்ந் தேற்றவர்க்கே. (51)

சிகராத்ரி கூறிட்ட வேலும்செஞ்
சேவலும் செந்தமிழால்
பகர்ஆர்வம் ஈ;பணி பாசசங்க்
ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி
துரங்க ந்ருப,குமரா,
குகராட் சசபட்ச, விட்சோப
தீர, குணதுங்கனே. (52)

வேடிச்சி கொங்கை விரும்பும்
குமரனை மெய்அன்பினால்
பாடிக் கசிந்துள்ள போதே
கொடாதவர், பாதகத்தால்
தேடிப் புதைத்துத் திருட்டிற்
கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை
வீணுக்கு மாய்ப்பவரே. (53)

சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கும்
அன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாய்இலை
யேஇலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று
போய்க்கடல் தீக்கொளுந்த

வாகைச் சிலைவளைத் தோன்மரு
　　கா,மயில் வாகனனே. (54)

ஆங்கா ரமும்அடங் கார்;ஒடுங்
　　கார்;பர மானந்தத்தே
தேங்கார்; நினைப்பும் மறப்பும்
　　அறார்;தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே
　　முருகன் உருவம்கண்டு
தூங்கார்; தொழும்புசெய் யார்;என்செய்
　　வார்யம தூதருக்கே? (55)

கிழியும் படிஅடற் குன்றெறிந்
　　தோன்கவி கேட்டுருகி
இழியும் கவிகற் றிடாதிருப்
　　பீர்;எரி வாய்நரகக்
குழியும் துயரும் விடாய்ப்படக்
　　கூற்றுவன் ஊர்க்குச்செல்லும்
வழியும் துயரும் பகரீர்,
　　பகரீர், மறந்தவர்க்கே. (56)

பொருபிடி யும்களி றும்விளை
　　யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல, சண்முக
　　வா,எனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண்
　　டிரும்;வினை யோம்இறந்தால்
ஒருபிடி சாம்பரும் காணாது
　　மாய உடம்பிதுவே. (57)

நெற்றுப் பசுங்கதிர்ச் செவ்வேனல்
காக்கின்ற நீலவள்ளி
முற்றுத் தனத்திற் கினிய
பிரான், இக்கு முல்லையுடன்
பற்றுக் கையும்வெந்து சங்க்ராம
வேளும் படவிழியால்
செற்றூர்க் கினியவன், தேவேந்த்ர
லோக சிகாமணியே. (58)

பொங்கார வேலையில் வேலைவிட்
டோன்அருள் போல்உதவ
எங்கா யினும்வரும், ஏற்பவர்க்
கிட்ட திடாமல்வைத்த
வங்கா ரமும்உங்கள் சிங்கார
வீடும் மடந்தையரும்
சங்காத மோகெடு வீர்உயிர்
போம்அத் தனிவழிக்கே? (59)

சிந்திக்கி லேன்;நின்று சேவிக்கி
லேன்;தண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேன்;ஒன்றும் வாழ்த்துகி
லேன்;மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்;பொய்யை நிந்திக்கி
லேன்;உண்மை சாதிக்கிலேன்;
புந்திக் கிலேசமும் காயக்
கிலேசமும் போக்குதற்கே. (60)

வரைஅற் றவுணர் சிரம்அற்று
வாரிதி வற்றச்செற்ற

புரைஅற்ற வேலவன் போதித்த
வா:பஞ்ச பூதமும்அற்
றுரையற் றுணர்வற் றுடல்அற்
றுயிர்அற் றுபாயமற்றுக்
கரையற் றிருள்அற் றெனதற்
றிருக்கும்அக் காட்சியதே. (61)

ஆலுக் கணிகலம் வெண்டலை
மாலை; அகிலம்உண்ட
மாலுக் கணிகலம் தண்ணந்
துழாய்;மயில் ஏறும்ஐயன்
காலுக் கணிகலம் வானோர்
முடியும் கடம்பும்;கையில்
வேலுக் கணிகலம் வேலையும்
சூரனும் மேருவுமே. (62)

பாதித் திருவுருப் பச்சென்
றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வேல
னைச்சென்று போற்றிஉய்யச்
சோதித்த மெய்அன்பு பொய்யோ?
அழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே
எனக்கிங்ஙன் சந்தித்ததே! (63)

பட்டிக் கடாவில் வரும்அந்த
கா,உனைப் பார்அறிய
வெட்டிப் புறங்கண் டலாது
விடேன்;வெய்ய சூரனைப்போய்

முட்டிப் பொருதசெவ் வேற்பெரு
மாள்திரு முன்புநின்றேன்;
கட்டிப் புறப்பட டா;சத்தி
வாள்என் றன் கையதுவே. (64)

வெட்டும் கடாமிசைத் தோன்றும்வெங்
கூற்றன் விடும்கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க
வேண்டும்; கராசலங்கள்
எட்டும் குலகிரி எட்டும்விட்
டோடஎட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்கும்
கலாப மயூரத்தனே. (65)

நீர்க்குமி ழிக்கு நிகர்என்பர்
யாக்கை;நில் லாதுசெல்வம்;
பார்க்கும் இடத்தந்த மின்போலும்
என்பர்; பசித்துவந்தே
ஏற்கும் அவர்க்கிட என்னின்எங்
கேனும் எழுந்திருப்பார்;
வேற்கும ரற்கன் பிலாதவர்
ஞானம் மிகவும்நன்றே! (66)

பெறுதற் கரிய பிறவியைப்
பெற்றும்நின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற்றி
லேன்;மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம
சைல சரசவல்லி

இறுகத் தழுவும் கடகா
சலபன் னிருபுயனே. (67)

சாடும் சமரத் தனிவேல்
முருகன் சரணத்திலே
ஓடும் கருத்தை இருத்தவல்
லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்
பாடும் கவுரி பவுரிகொண்
டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமாய்
இருக்கும், அதீதத்திலே. (68)

தந்தைக்கு முன்னம் தனிஞான
வாள்ஒன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி எனைத்தேற்
றியபின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதென்னை என்செய
லாம்?சத்தி வாள்ஒன்றினால்
சிந்தத் துணிப்பன் தணிப்பரும்
கோபத்ரி சூலத்தையே. (69)

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள்; மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும்
நாமங்கள்; முன்புசெய்த
பழிக்குத் துணைஅவன் பன்னிரு
தோளும்; பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங்
கோடன் மயூரமுமே. (70)

துருத்தி எனும்படி கும்பித்து
வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி உடம்பை ஒறுக்கில்என்
ஆம்?சிவ யோகம்என்னும்
குருத்தை அறிந்து முகம் ஆ
றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தில் இருத்தும்கண்
டீர்;முத்தி கைகண்டதே. (71)

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே. (72)

போக்கும் வரவும் இரவும்
பகலும் புறம்புஉள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும்இல்
லாதொன்று வந்துவந்து
தாக்கும்; மனோலயம் தானே
தரும்;எனைத் தன்வசத்தே
ஆக்கும்; அறுமுக வா,சொல்லொ
ணாதிந்த ஆனந்தமே. (73)

அராப்புனை வேணியன் சேய்அருள்
வேண்டும்; அவிழ்ந்தஅன்பால்

குராப்புனை தண்டையந் தாள்தொழல்
வேண்டும்; கொடியஐவர்
பராக்கறல் வேண்டும்; மனமும்
பதைப்பறல் வேண்டும்என்றால்
இராப்பகல் அற்ற இடத்தே
இருக்கை எளிதல்லவே. (74)

படிக்கின் றிலைபழ னித்திரு
நாமம்; படிப்பவர்தாள்
முடிக்கின்றிலை; முரு காஎன்கி
லை;முசி யாமல்இட்டு
மிடிக்கின் றிலை;பர மானந்தம்
மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலை;நெஞ்ச மே,தஞ்சம்
ஏது நமக்கினியே? (75)

கோடாத வேதனுக்கு யான்செய்த
குற்றம்என்? குன்றெறிந்த
தாடாள னே,தென் தணிகைக்
குமர,நின் தண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத
கண்ணும் தொழாதகையும்
பாடாத நாவும் எனக்கே
தெரிந்து படைத்தனனே. (76)

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப்
பயோதரம் சேரஎண்ணி
மால்வாங்கி ஏங்கி மயங்காமல்
வெள்ளி மலைஎனவே

கால்வாங்கி நிற்கும் களிற்ருன்
கிழத்தி கழுத்திற்கட்டும்
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி
பூங்கழல் நோக்கு,நெஞ்சே. (77)

கூர்கொண்ட வேலனைப் போற்ருமல்
ஏற்றம்கொண் டாடுவீர்காள்,
போர்கொண்ட காலன் உமைக்கொண்டு
போம்அன்று, பூண்பனவும்
தார்கொண்ட மாதரும் மாளிகை
யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவர்? ஐயோ!கெடு
வீர், நும் அறிவின்மையே! (78)

பந்தாடும் மங்கையர் செங்கயற்
பார்வையில் பட்டுழலும்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள்
வாய்;செய்ய வேல்முருகா
சொந்தார் கடம்பு புடைசூழ்
திருத்தணிக் குன்றில்நிற்கும்
கந்தா, இளங்குமரா, அம
ராவதி காவலனே. (79)

மாகத்தை முட்டி வரும்நெடுங்
கூற்றன்வந் தால்என்முன்னே
தோகைப் புரவியில் தோன்றிநிற்
மாய்;சுத்த நித்தமுத்த
த்யாகப் பொருப்பை த்ரிபுராந்
தகனை த்ரியம்பகனைப்

பாகத்தில் வைக்கும் பரமகல்
யாணிதன் பாலகனே. (80)

தாரா கணம்எனும் தாய்மார்
அறுவர் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பால்உண்ட
பாலன் அரையில்கட்டும்
சீராவும் கையில் சிறுவாளும்
வேலும்என் சிந்தையவே;
வாரா தகல்அந்த காவந்த
போதுயிர் வாங்குவனே. (81)

தகட்டிற் சிவந்த கடம்பையும்
நெஞ்சையும் தாள்இணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தருள்
வாய்;புண்ட ரீகன்அண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர
லோகத்தை முட்டஎட்டிப்
பகட்டில் பொருதிட்ட நிட்டூர
சூர பயங்கரனே. (82)

தேங்கிய அண்டத் திமையோர்
சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள்
கலாபப் புரவிமிசைத்
தாங்கி நடப்ப முறிந்தது
சூரன் தளம்;தனிவேல்
வாங்கி அனுப்பிடக் குன்றங்கள்
எட்டும் வழிவிட்டவே. (83)

மைவரும் கண்டத்தர் மைந்த,கந்
தாஎன்று வாழ்த்தும் இந்தச்
கைவரும் தொண்டன்றி மற்றறி
யேன்;கற்ற கல்வியும்போய்ப்
பைவரும் கேளும் பதியும்
கதறப் பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும்
போதுன் அடைக்கலமே. (84)

காட்டில் குறத்தி பிரான்பதத்
தேகருத் தைப்புகட்டின்
வீட்டில் புகுதல் மிகஎளி
தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார
நேரண்ட மூச்சைஉள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கும் ஓடாமல்
சாதிக்கும் யோகிகளே. (85)

வேலாயு தன்;சங்கு சக்ரா
யுதன்விரிஞ் சன்அறியாச்
சூலா யுதன்தந்த கந்தச்
சுவாமி. சுடர்க்குடுமிக்
காலாயு தக்கொடி யோனருள்
ஆய கவசமுண்டென்
பால்ஆ யுதம்வரு மோயம
னோடு பகைக்கினுமே? (86)

குமரா, சரணம் சரணம்என்
றண்டர் குழாம்துதிக்கும்

அமரா வதியிற் பெருமாள்
திருமுகம் ஆறும்கண்ட
தமர்ஆகி வைகும் தனியான
ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு
வந்தினி என்செயுமே? (87)

வணங்கித் துதிக்க அறியா
மனித ருடன்இணங்கிக்
குணங்கெட்ட துட்டனை ஈடேற்று
வாய்;கொடி யும்கழுகும்
பிணங்கத் துணங்கை அலகைகொண்
டாடப் பிசிதர்தம்வாய்
நிணம்கக்க விக்ரம வேலா
யுதம்தொட்ட நிர்மலனே. (88)

பங்கே ருகன்எனைப் பட்டோ
லையில்இடப் பண்டுதனை
தன்காலில் இட்ட தறிந்தில
ளோ?தனி வேல்எடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ்
சிலம்பு புலம்பவரும்
எம்கோன் அறியின் இனிநான்
முகனுக் கிருவிலங்கே. (89)

மாலோன் மருகனை, மன்றுடி
மைந்தனை, வானவர்க்கு
மேலான தேவனை, மெய்ஞ்ஞான
தெய்வத்தை, மேதினியில்

சேலார் வயற்பொழிற் செங்கோ
டணைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில
னே, அந்த நான்முகனே. (90)

கருமால் மருகனைச் செம்மான்
மகளைக் களவுகொண்டு
வரும் ஆ குலவனைச் சேவற்கைக்
கோளனை, வானம்உய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல
னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை
வாழ்த்துகை சாலநன்றே. (91)

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக்
கும்சுத்த ஞானம்எனும்
தண்டையம் புண்டரி கந்தரு
வாய்; சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலம் கொண்டுபண் டண்டர்அண்
டம்கொண்டு மண்டிமிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல்
வேல்தொட்ட காவலனே. (92)

மண்கமழ் உந்தித் திருமால்
வலம்புரி ஓசைஅந்த
விண்கமழ் சோலையும் வாவியும்
கேட்டது; வேல் எடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும்
பிள்ளை திருவரையில்

கிண்கிணி ஓசைபதிஞ்
லுலகமும் கேட்டதுவே. (93)

தெள்ளிய ஏனலில் கிள்ளையைக்
கள்ளச் சிறுமிஎனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட்
டிலே;சிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத்
தோதகச் சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார
மூரலை வேட்டநெஞ்சே. (94)

யான்தான் எனும்சொல் இரண்டும்கெட்
டால்அன்றி யாவருக்கும்
தோன்றுது, சத்தியம்; தொல்லைப்
பெருநிலம் சூகரமாய்க்
கீன்றுன் மருகன், முருகன்,
க்ருபாகரன் கேள்வியினுல்
சான்ருரும் அற்ற தனிவெளிக்
கேவந்து சந்திப்பதே. (95)

தடக்கொற்ற வேள்மயி லேஇடர்
தீரத் தனிவிடின்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்தும்நின்
தோகையின் வட்டம்இட்டுக்
கடற்கப் புறத்தும் கதிர்க்கப்
புறத்தும் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்தும் திசைக்கப்
புறத்தும் திரிகுவையே. (96)

சேவில் திகழ்வயற் செங்கோடை
    வெற்பன் செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணமுடி
    தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலில் கிடப்பன, மாணிக்க
    ராசியும், காசினியைப்
பாலிக்கும் மாயனும் சக்ரா
    யுதமும் பணிலமுமே. (97)

கதிதனை ஒன்றையும் காண்கின்றி
    லேன்; கந்த, வேல்முருகா,
நதிதனை அன்னபொய் வாழ்வில்அன்
    பாய்நரம் பால்பொதிந்த
பொதிதனை யும்கொண்டு திண்டாடு
    மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேஎன்
    றன்மனம் வேகின்றதே. (98)

காவிக் கமலக் கழலுடன்
    சேர்த்தெனைக் காத்தருள்வாய்;
தூவிக் குலமயில் வாகன்
    னே, துணை ஏதும்இன்றித்
தாவிப் படரக் கொழுகொம்
    பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி
    வாடிப் பதைக்கின்றதே. (99)

இடுதலைச் சற்றும் கருதேனைப்
    போதம் இலேனைஅன்பால்

கெடுதல் இலாத் தொண்ட ரிற்கூட்
டியவா! கிரவுஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன்;
பிறவி அறஉச்சிறை
விடுதலைப் பட்டது; விட்டது
பாச வினைவிலங்கே. (100)

சலம்காணும் வேந்தர் தமக்கும்அஞ்
சார்;யமன் சண்டைக்கஞ்சார்;
துலங்கா நரகக் குழி அணு
கார்;துட்ட நோய்அணுகார்;
கலங்கார் புலிக்கும் கரடிக்கும்
யானைக்கும்;கந்தன் நன்னூல்
அலங்காரம் நூற்றுள் ஒருகவி
தான்கற் றறிந்தவரே. (101)

திருவடி யும்தண்டை யும்சிலம்
பும்சிலம் பூடுருவப்
பொருவடி வேலும் கடம்பும்
தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்கள்
ஆறும் மலர்க்கண்களும்
குருவடி வாய்வந்தென் உள்ளம்
குளிரக் குதிகொண்டவே. (102)

இராப்பகல் அற்ற இடம்காட்டி
யான்இருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாளரு
ளாய்;கரி கூப்பிட்டநாள்

கராப்படக் கொன்றக் கரிபோற்ற
நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம, வேல, நிருதசங்
கார பயங்கரனே. (103)

செங்கேழ் அடுத்த சினவடி
வேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு
தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளம் சொரியும்செங்
கோடைக் குமரன்என
எங்கே நினைப்பினும் அங்கேஎன்
முன்வந் தெதிர்நிற்பனே. (104)

ஆவிக்கு மோசம் வருமா
றறிந்துன் அருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி
லேன்,வினை தீர்த்தருளாய்,
வாவித் தடவயல் சூழும்
திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே,
அமர சிகாமணியே. (105)

கொள்ளித் தலையில் எறும்பது
போலக் குலையும்என்றன்
உள்ளத் துயரை ஒழித்தரு
ளாய்;ஒரு கோடிமுத்தம்
தெள்ளிக் கொழிக்கும் கடற்செந்தில்
மேவிய சேவகனே,

வள்ளிக்கு வாய்த்தவ னே,மயில்
ஏறிய மாணிக்கமே. (106)

சூலம் பிடித்தெம பாசம்
சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்கொரு காலும் அஞ்
சேன்; கடல் மீதெழுந்த
ஆலம் குடித்த பெருமான்
குமாரன், அறுமுகவன்
வேலும் திருக்கையும் உண்டே
நமக்கொரு மெய்த்துணையே. (107)

# அருஞ்சொற்பொருள் அகராதி

அகம்-இடம்
அகிலம்-உலகம்
அசலம்-மலை
அஞ்சல்-அஞ்சாதே
அடங்க-முழுவதும்
அடல்-பாவத்தை அடுதல், வலிமை
அண்டகடாகம்-வானப் பரப்பு
அண்டம்-தேவலோகம்
அண்டர்-தேவர்
அண்டுதல்-அடைதல்
அணி-படைவகுப்பு
அத்தம்-பொருள
அத்ரி-மலை
அதீதம்-எல்லாம்கடந்தநிலை
அந்தகன்-யமன்
அந்த வாயில்-உள்வாசல்
அம்பரம்-ஆகாசம்
அம்புயம்-தாமரை
அம்புலியின் கீற்று-பிறை
அமராவதி-இந்திரன் நகர்
அயர்தல்-மறத்தல்
அயன்-பிரமன்
அயில்-கூர்மை
அரக்கர்-அசுரர்
அரண்-பாதுகாப்பு
அரா-பாம்பு
அருணை-திருவண்ணாமலை
அருத்தல்-பூரகம் செய்தல்
அரை-இடை
அலகை-பேய்
அவுணர்-அசுரர்
அளி-அன்பு
அனந்தன்-ஆதிசேடன்
அக்ஷமம்-பொறுமையின்மை
ஆக்கை-உடம்பு
ஆகுலம்-கவலை
ஆகுலவன்-வேலையை உடையவன்
ஆர்க்கை-கட்டுதல்
ஆராமை-போதாமை
ஆர்ப்பு-ஆரவாரம்
ஆர்வம்-விருப்பம்
ஆரம்-முத்து
ஆலம்-விடம்
ஆலித்தல்-ஆரவாரித்தல்
இக்கு-கரும்பு
இடர்-துன்பம்
இடுதல்-கொடுத்தல், வறியவர்க்கு ஈதல்
இதழி-கொன்றை
இமையோர்-தேவர்
இரட்சித்தல்-பாதுகாத்தல்
இலஞ்சியம்-அருமைக் குழந்தை
இழிதல்-இறங்குதல், இழிவாதல்
ஈடேற்றுதல்-கரையேற்றுதல், நலமடையச் செய்தல்
உடுபடலம்-நட்சத்திரப் பரப்பு
உடைமணி-இடையிற் கட்டும் மணிமாலை
உதிரம்-இரத்தம்
உந்தி-கொப்பூழ்
உந்தித்தடம்-கொப்பூழ்
உபாயம்-தந்திரம்
உய்தல்-உஜ்ஜீவனம் அடைதல்
உரகபதி-ஆதிசேடன்
உரகம்-பாம்பு
உரம்-மார்பு
உழல்வது-திரிவது
உன்னல்-தியானித்தல்
ஊழ்-விதி

ஏகாசம்-மேற்போர்வை
ஏற்பவர்-இரப்பவர்
ஏற்றல்-இரத்தல்
ஏனல்-தினைப்புனம்
ஐவர்-பஞ்சேந்திரியங்கள், பஞ்சபூதங்கள்
ஓதம்-கடல்
ஓர்தல்-எண்ணுதல்
கமலம்-தாமரை
ஓலை-யமன் விடும் உத்தரவு
கசிதல்-உருகுதல்
கட்செவி-பாம்பு
கட்டாரி-குத்தீட்டி
கடகம்-தோள்வளை, படை
கடம்-காடு, மதம்
கடா-ஆண் எருமை
கடைஏடு-இறுதியில் யமன் அனுப்பும் ஓலை
கண்டம்-கழுத்து
கண்டு-கற்கண்டு
கணம்-கூட்டம்
கம்பம்-அசைவு
கமலம்-தாமரை
கரா-முதலை
கராசலம்-யானை
கரி-யானை
கலவி-புணர்ச்சி
கலாபம்-மயில் தோகை
கலாபி-மயில்
கவி-குரங்கு
கழல்-காலில் அணியும் அணிகலம்
கழுத்தில் கட்டும் நூல் -தாலி
கழுது-பேய்
களிறு-ஆண்யானை
கன்னிப்பூகம்-காயக்கத் தொடங்காத கமுகு
கனகசக்ரத்திடர்-உலகப் புறச் சக்ரவாள கிரி
கனகப்பருவரைக் குன்று-மேருமலை
காசினி-உலகம்
காட்சி-ஞானம்
காந்தன்-கணவன்
காயக்கிலேசம்-உடம்பால் வரும் துன்பம்
காயம்-உடம்பு
கார்-கருமை
கார்உடல்-கருமையான உடம்பு
கால்-காற்று, பாதம்
காலாயுதம்-கோழி
காவலன்-தலைவன்
காவிக் கமலம்-செந்தாமரை
கிட்டுவது-அடைவது
கிரி-மலை
கிரியை-செயல்
கிலேசம்-துயரம்
கிலேசித்தல்-வருந்துதல்
கிழத்தி-மனைவி
கிழவன்-உரியவன்
கிள்ளை-கிளி
கின்னம்-துயரம்
கீன்றன்-தோண்டியவன்
கு-பூமி
குசை-தருப்பை
குடில்-குடிசை
குடுமி-தலை
கும்பம்-மத்தகம்
கும்பித்தல்-மூச்சை இழுத்தல்
குரா-ஒருவகை மரம்
குருதி-இரத்தம்
குருந்து-குருத்துப் போன்ற இளங்குழந்தை
குலம்-மேன்மை
குலைதல்-நடுங்குதல்
குவடு-மலை
குவலயம்-பூமி

குழாம்—கூட்டம்
குறிஞ்சி—குறிஞ்சிநிலத்துஊர்
குறிஞ்சி—மலையும் மலையைச்
சார்ந்த இடமும்
குறித்தல்—ஒலித்தல்
குறுகுதல்—சமீபித்தல்
குன்னம்—இரகசியம்
கூர்—கூர்மை
கூளி—பேய்
கூற்றன், கூற்று—யமன்
கூற்றுவன்—யமன்
கூறு—பகுதி
கெண்டை—ஒருவகை மீன்
கேழ்—நிறம்
கேள்—சுற்றம்
கைக்கோளன்—கையில்
கொண்டவன்
கைத்தல்—கசத்தல்
கைவரும் தொண்டு—பயனை
அளிக்கும் தொண்டு
கொக்கு—மாமரம்
கொங்கு—பூந்தாது
கொட்டில்—குடிசை
கொட்பு—சுழற்சி
கொடி—காக்கை
கொந்து—பூங்கொத்து
கொல்லி—கொல்லிப்பண்
கொளுந்தல்—எரிதல்
கொற்றம்—வெற்றி
கோடு—கொம்பு, தந்தம்
கோடுதல்—நெறிதவறல்
கோலம்—அழகு
கோள்—கிரகம்
கோன்—தலைவன்
சகம்—உலகம்
சங்க்ராமம்—போர்
சங்காதம்—துணை
சசிதேவி—இந்திராணி
சண்டம்—கொடுமை
சத்தி—வேல்
சயிலம்—மலை
சரணம்—திருவடி
சரீரி—சரீரத்தை உடையது
சலதி—கடல்
சலம்—வஞ்சகம்
சாகரம்—கடல்
சாடுதல்—மோதுதல்
சாதித்தல்—செயலை முடித்தல்
வற்புறுத்திக் கூறுதல்
சான்று—சாட்சி
சாளிகை—பை
சிகண்டி—மயில்
சிகராத்ரி—சிகரத்தை
உடைய மலை
சித்ரம்—அழகு
சிந்தாகுலம்—மனக்கவலை
சிந்து—கடல்
சிலம்பு—ஒருவகைக்
காலணி, மலை
சிலை—வில்
சின்னம்—அடையாள
வாத்தியம்
சீரா—உடைவாள்
சுட்டி—ஒருவகை ஆயுதம்
சூகரம்—பன்றி
சூடுதல்—தலையில் அணிதல்
சூது—பொய்
சூர்—சூரன்
செங்கோடை—திருச்
செங்கோடு
செச்சை—வெட்சி
செம்மான் மகள்-வள்ளி
செய்ய-சிவந்த
செற்றார்—அழித்தவர்
செறுதல்-அழித்தல்
சேந்தன்-முருகன்
சேய்-மகன், முருகன்
சேல்-ஒருவகை மீன்

சோரன்-திருடன்
சோரி-இரத்தம்
ஞானகரன்-ஞானம் நிறைந்தவன்
த்யாகம்-கொடை
த்ரிபுராந்தகார்-சிவ பெருமான்
த்ரியம்பகன்-சிவபெருமான்
தசை-ஊன்
தஞ்சம்-பற்றுக்கோடு
தடம்-விசாலம்
தண்டம்-ஒறுத்தல்
தண்டு-சேனை
தந்து-நூல்
தரு-மரம்
தபோதனர்-தவத்தைச் செல்வமாகக் கொண்டவர்
தமர்-அன்பர்
தரங்கம்-அலை
தரம்-தகுதி, மேன்மை
தரளம்-முத்து
தளம்-சேனை
தளை-விலங்கு
தறுகண்-கொடுமை
தனி-ஒப்பற்ற
தாடாளன்-முயற்சி உடையவன்
தாம்பு-கயிறு
தாராகணம்-நட்சத்திரக் கூட்டம்
தாவடி ஒட்டுதல்-தாவி அடியிட்டு நடக்கும்படி செய்தல்
தான்-அவன்
திகழ்தல்-விளங்குதல்
திடர்-மேடு
திருமுன்பு-சந்நிதி
திறல்-வலிமை
துங்கன்-தூயவன்
துணங்கை-கைகோத்து ஆடுதல்
துணித்தல்-வெட்டுதல்
துரங்கம்-வாகனம்
துருத்தி-காற்றடிக்கும் கருவி
துவர்த்தல்-துவர்ப்பாக இருத்தல்
துவளுதல்-வாடுதல்
துழாய்-துளசி
துறந்தோர்-துறவியர்
தூவி-மயிலின் பீலி
தேசிகன்-குரு
தேற்றுதல்-தேற்றித்துயர் தீர்த்தல்
தொடுதல்-பிரயோகம் செய்தல்
தொல்லை-பழமை
தொழும்பு-தொண்டு
தோகை-மயில்
தோகைப்புரவி-மயில் வாகனம்
தோதகம்-வஞ்சகம்
தோய்தல்-படிதல்
ந்ருபன்-கடவுள்
நடித்தல்-நடனம் செய்தல்
நாற்றல்-தொங்கவிடல்
நாமம்-பெயர்
நான்முகன்-பிரமன்
நிகரம்-கூட்டம்
நிட்டூரம்-கொடுமை
நிட்டூரன்-நிந்தைக்கு இடமானவன்
நிணம்-ஊன்
நித்திலம்-முத்து
நிர்க்குணம்-குணமற்ற நிலை
நிரைத்தல்-வரிசையாக இருத்தல்
நினைப்பு-சகலாவஸ்தை
நெடுமை-உயரம்

நெற்று—முதிராத
நேடுதல்—தேடுதல்
ப்ரமம்—மயக்கம்
ப்ரதாபன்—புகழ் உடையவன்
ப்ரமாதம்—தவறு
பகர்தல்—கூறுதல்
பகல்—சகலாவஸ்தை
பகிர்மின்கள்—பகிர்ந்து கொடுங்கள்
பங்கேருகன்—பிரமன்
பசுபதி—சிவபெருமான்
பட்சன்—அழிப்பவன்
பட்டி—முரட்டுத் தன்மை
பட்டோலை—எழுதும் ஓலை
படி—பூமி
பணம்—பாம்பின் படம்
பணாமகுடம்—படத்தை யுடைய தலை
பணாமுடி—படங்களை யுடைய தலை
பணி—அணிகலன், பாம்பு
பணிலம்—சங்கு
பணை—தோள்
பத்தி—வரிசை
பதாகை—கொடி
பதி—ஊர், தலைவன்
பதுமம்—தாமரை
பயங்கரன்—அச்சத்தை உண்டாக்குபவன்
பயத்தல்—பெறுதல்
பயோதரம்—நகில்
பவுரி—சுழன்று ஆடுதல்
பரம்—மேலானது
பராக்ரமம்—வலிமை
பராக்கு—வெளி நோக்கு
பரி—குதிரை
பாசம்—கயிறு
பாதகம்—பாவம்
பாலித்தல்—காப்பாற்றுதல்

பாவனை—உபதேசம்
பாவையர்—பெண்கள்
பாஸ்கரன்—சூரியன்
பிசிதர்—அசுரர்
பிடி—பெண் யானை
பிணங்குதல்—ஒன்றோடு ஒன்று மோதுதல்
பீலி—மயில் தோகை
புகட்டுதல்—செலுத்துதல்
புடை—பக்கம்
புண்டரிகம், புண்டரீகம்—தாமரை
புணை—தெப்பம்
புந்தி—புத்தி
புயம்—தோள்
புரவி—வாகனம்
புரை—குற்றம்
புல்குதல்—அணைத்தல்
புவனம்—பூமி
புவி—உலகம்
புறம் காணுதல்—தோல்வி யுறச் செய்தல்
புனம்—தினைக்கொல்லை
பூகம்—கமுகு
பூதர்—மனிதர்
பூதரம்—மலை
பூதவீடு—உடம்பு
பெருக்கு—வெள்ளம்
பேதை—பெண்
பேறு—பாக்கியம்
பைவருதல்—துன்புறல்
பொக்கக்குடில்—உடம்பு
பொக்கம்—பொய்
பொங்கல்—கிளர்தல்
பொட்டு—நுண்பொடி
பொதி—சுமை
பொதிசோறு—கட்டுச்சோறு
பொருதல்—போரிடுதல்
பொருப்பு—மலை

பொறி—எழுத்து
போதம்—ஞானம்
போதாய்—வருவாய்
மங்கல்ய தந்து—தாலி
மண்டலம்—படைத்தொகுதி
மண்டுதல்—நெருங்குதல்
மதி—அறிவு
மதித்தல்—கடைதல்
மயல்—காமம்
மயூரம்—மயில்
மரு—மணம்
மருங்கு—இடை
மறப்பு—கேவலாவஸ்தை
மன்றுடி—நடராஜப் பெருமான்
மனோலயம்—மனம் ஒன்றிலே ஈடுபட்டு நிற்றல்
மாகம்—வானம்

மாயன்—திருமால், பெருமை
மாலோன்—திருமால்
மால்—அன்பு திருமால் பெருமை, மயக்கம், விருப்பம்
மிசை—மேல்
மிடித்தல்—வறுமை அடைதல்
மிண்டுதல்—நெருங்கித் துன்புறுத்தல்
மின்—மின்னல்
முகடு—உச்சி
முகுளம்—மொட்டு
முசியாமை—சோர்வடையாமை
முதண்டகூடம்—முதிய ஆகாசம்
மூரல்—புன்னகை
மெத்தி—மிகுதியாகி
மெய்—உண்மை
மெய்ம்மை—உண்மை
மெல்லியர்—பெண்கள்
மேதினி—பூமி
மை—நீலநிறம்
மொக்குதல்—உண்ணுதல்
யாக்கை—உடம்பு
ராசி—கூட்டம்
ராவுத்தன்—குதிரைவீரன்
வங்காரம்—பொன்
வதனம்—முகம்
வந்தித்தல்—வணங்குதல்
வரை—மலை
வல்லபம்—வலிமை
வலம்புரி—சங்கு
வல்லி—வள்ளி
வாகை—வெற்றிமாலை
வாசி—குதிரை
வாரணம்—யானை
வாரி, வாரிதி—கடல்
வாவி—குளம்
வானவன்—தேவன்
விக்ரமம்—வெற்றி
விட்டவா—விட்டது என்ன வியப்பு
விடாய்—தாகம்
விண்டு—பெயர்ந்து
விண்ணோர்—தேவர்
வித்தாரம்—விரிவு
விநோதம்—விளையாட்டு
விரிஞ்சன்—பிரமன்
வினை—பாவம்
விக்ஷேபம்—கலக்கம் இன்மை
வீடு—முத்தி
வெகுளி—கோபம்
வெண்டலை—கபாலம்
வெம்புதல்—கோபித்தல்
வெய்ய—கொடிய
வெருவரல்—பயப்படுதல்
வெளி—ஆகாசம், சிதாகாசம்
வெற்பு—மலை

வேட்டல்–விரும்புதல்
வேட்டவன்–மணந்தவன்
வேடிச்சி–வேடப்பெண்
வேணி–சடை
வேதன்–பிரமன்
வேல்வாங்கி–வேலை ஏவியவன்
வேலை–கடல்
வேள்–காமன்
வை–கூர்மை

அமுத நிலையம்